விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com


கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

சங்கு 23
ஒலி 187 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 10 வெள்ளிக்கிழமை (24.06.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## அதிக விலைக்கு அரிசி விற்பனை
### 186 வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல்

(கொழும்பு)

அதிக விலைக்கு அரிசியை விற்பனை செய்த 186 வர்த்தகர்களுக்கும் விலையைக் காட்டாமல் அரிசி விற்பனை செய்த மற்றும் அரிசியை விற்பனை செய்ய மறுத்த 479 வர்த்தகர்களுக்கும் எதிராக வழக்குத் தொடரப்படும் என 15

## வவுனியாவில் விபத்து; இளைஞன் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா-நொச்சிமோட்டை பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் ஸ்தலத்தில் பலியானதுடன் மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வவுனியா பறநட்டகல் கிராமத்தைச் சேர்ந்த 42 வயதுடைய ஒருவர் தனது மைத்துனருடன் அறுவடை இயந்திரத்திற்கு எரிபொருள் பெறுவதற்காக குறித்த இயந்திரத்தினை எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நிறுத்திவிட்டு மோட்டார் சைக் 15

## 7 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிவாயுவுடன்
### இரண்டு கப்பல்கள் இலங்கை வருகின்றன

(கொழும்பு)

7 ஆயிரம் மெட்ரிக் தொன் எரிவாயு கப்பல்கள் இரண்டு இலங்கைக்கு வரவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் 5 மற்றும் 12 ஆம் திகதிகளில் குறித்த க்கப்பல்கள் இலங்கைக்கு 15

# இலங்கையின் பொருளாதார மீட்சிக்கு இந்தியா உதவும்

## இந்திய உயர்மட்டக் குழு ஜனாதிபதி கோட்டாவிடம் உறுதி



(கொழும்பு)

இலங்கையின் விரைவான பொருளாதார மீட்சிக்கு உதவுவதற்கு இந்தியா தயார் என இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்திய உயர்மட்டக் குழு ஜனாதிபதி கோட்டாவிடம் உறுதியளித்துள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் பிரதேச செயலகங்களின் திடீர் அறிவிப்புக்களால் குழப்பம்
### எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அறிவித்தல்கள் கிழித்தெறியப்பட்டன



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள பிரதேச செயலகங்களின் பிரதேச செயலர்களின் திடீர் அறிவிப்புக்களால் நேற்று வியாழக்கிழமை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் குழப்பங்கள் ஏற்பட்டன. 15

### எரிபொருள் நிரப்பு நிலையத்தில்
## பொலிஸார் மீது இராணுவம் தாக்குதல்

(கொழும்பு)

வரகாபொல, தும்மலதெனிய பகுதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையத்தில் நேற்று முன்தினம் இரவு பொலிஸ் அதிகாரி ஒருவருக்கும் இராணுவ அதிகாரி ஒருவருக்கும் இடையில் மோதல் ஏற்பட்டுள்ளது.

எரிபொருள் நிரப்பு நிலையத்தில் கடமை 15

## ஜப்பான் தூதுவர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

ஜப்பன் தூதுவர் இலங்கைக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார் என இலங்கைக்கான ஜப்பானிய தூதுவராலயம் அறிவித்துள்ளது. 15

## நாட்டில் நெருக்கடி தொடர்ந்தால் உள்நாட்டு யுத்தம் வெடிக்கலாம்
### வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை



(கொழும்பு)

மக்களால் பிரயோகிக்கப்படும் அழுத்தங்களினால் நாட்டில் உள்நாட்டு யுத்தம் ஏற்படும் அபாயம் காணப்படுவதாகவும் அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் [illegible] ஆரம்பிக்கலாம் எனவும் ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார நேற்று தெரிவித்துள்ளார். 15

## நீதி அமைச்சர் விஜயதாச
### இன்று யாழ். விஜயம்


(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ இன்று வெள்ளிக்கிழமை யாழ். வருகைதரவுள்ளார்.

இந்து பௌத்த கலாசார பேரவை 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



இந்திய நிதி அமைச்சின் செயலாளர் அஜய் சேத். தலைமைப் பொருளாதார ஆலோசகர் வி.அனந்த நாகேஸ்வரன் மற்றும் வெளியுறவு செயலாளர் வினய் குவாத்ரா ஆகியோர் பிரதமர் ரணிலை நேற்று சந்தித்த போது...

# கண்ணீர் அஞ்சலி

## திருமதி சிவபாக்கியம் நாகலிங்கம்



(கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், ஆரம்பகால குடும்பம் சார்ந்தவர்)

*தோற்றம்:- 23.08.1934*
*மறைவு:- 21.06.2022*

அன்னார் ஆலய ஆரம்பகால குடும்பம் சார்ந்தவரும் ஆலய முன்னேற்றத்தில் முன்னின்று செயற்பட்டவரும் ஆலய மஹோற்சவ உபயகாரரான **நாகலிங்கத்தின்** அன்பு மனைவியும் ஆவார்.

அன்னாரின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கிருபாகர சுவாமியை பிரார்த்திக்கின்றோம்.

**நிர்வாக சபை**
**கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில், கொக்குவில்.**

(11965)

# மரண அறிவித்தல்



பிறப்பு 1952 . 06 . 19 — இறப்பு 2022 . 06 . 23

## தவசி சுந்தரம் (சின்னக்கிளி)

### (பிரபல மரச்சிற்பக் கலைஞர்)

தொந்தனையைப் பிறப்பிடமாகவும் மயிலணி வடக்கு சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட தவசி சுந்தரம் (சின்னக்கிளி) அவர்கள் நேற்று (23.06.2022) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தவசி - பொன்னி தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டு - சரஸ்வதி தம்பதியரின் மருமகனும் அருந்தவத்தின் அன்புக் கணவரும் சுகுமார் (லண்டன்), சுகிதா, சுமணா (லண்டன்), றஜினா (லண்டன்), நிரேஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் பரமேஸ்வரி (லண்டன்), நகுலேஸ்வரன், சிறி (லண்டன்), சிவகரன் (லண்டன்), மதி ஆகியோரின் அன்பு மாமனாரும் பவிசன், யுதிக்கா, டயசிகா, ஆரணுகா, அஸ்வின், அகில், அக்சித் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.06.2022) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியை பி.ப ஒரு மணியளவில் சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:* குடும்பத்தினர்
**077 045 8277**

(C-4531)

# கிளிநொச்சி விசேட தேவைகளுக்குட்பட்டோர் வலையமைப்பு

## பணி வெற்றிடங்கள்

**1. கணக்கெழுதுநர்** :- இருபாலாரும் (ஒரு வெற்றிடம்) கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.
**கல்வித் தகைமை** :- A/L வர்த்தக பிரிவு மூன்று பாட சித்தி
**வயதெல்லை** :- 24 - 35
**மேலதிக தகைமைகள்** :- கணினி அறிவு (அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்) துறைசார் கல்வியறிவு (சான்றிதழ், முன்னனுபவம் விரும்பத்தக்கது.

**2. இல்ல முகாமையாளர்** :- (வெற்றிமனை பெண்கள் மனநல காப்பகம்):- ஒரு வெற்றிடம் (தங்கி நின்று பணிபுரியக் கூடியவர்கள்)
**வயதெல்லை** :- 30ற்கு மேல்
**கல்வித் தகைமை** :- A/L Pass

**3. விசேடதிறன் கல்வி நிலையத்திற்கான ஆசிரியர்** :- பெண்கள் (02 வெற்றிடம்)
**வயதெல்லை** :- 25ற்கு மேல்
**கல்வித் தகைமை** :- A/L Pass
**மேலதிக தகைமை** :- விசேட தேவைகளுக்குட்பட்ட பிள்ளைகளின் கற்றல் செயற்பாட்டுக்கான கற்கைநெறி சான்றிதழ். ஆடல் பாடல், கைத்திறன் ஆற்றல் உடையவர்கள் விரும்பத்தக்கது. A/Lலில் பரத நாட்டியம் கற்றவர்கள் விரும்பத்தக்கது.

**4. பராமரிப்பாளர்கள்** :- பெண்கள் (02 வெற்றிடம்) (தங்கிநின்று பணிபுரியக் கூடியவர்கள்)
**வயதெல்லை** :- 30 ற்கு மேல்

**5. மருத்துவ உதவியாளர்** :- (ஒரு வெற்றிடம்) (பெண்கள், தங்கிநின்று பணிபுரியக் கூடியவர்கள்)
**வயதெல்லை** :- 25 ற்கு மேல்
**கல்வித் தகைமை** :- A/L Pass
**மேலதிக தகைமை** :- வைத்திய துறைசார் கற்கைநெறி பயிற்சி (அங்கீகரிக்கப்பட்ட நிறுவன சான்றிதழ்)

**குறிப்பு:-** தங்களது சுயவிபரங்களை 15.07.2022ஆம் திகதிக்கு முன் கீழ் குறிப்பிடப்படும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். கடித உறையின் வலதுபக்க மேல் மூலையில் தாங்கள் விண்ணப்பிக்கும் பதவி நிலையினை குறிப்பிடவும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:-**
இயக்குநர், கிளிநொச்சி விசேட தேவைகளுக்குட்டோர் வலையமைப்பு -
இலங்கை, மலையாளபுரம் தெற்கு,
மலையாளபுரம், கிளிநொச்சி.

**மேலதிக விபரங்களுக்கு:-**
இயக்குநர்,
தொ.இல: 077 831 7536

(11964)

# மரண அறிவித்தல்

## திருமதி சோமசுந்தரம் நித்தியரெத்தினம்



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11.01.1939 | 23.06.2022 |

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் நித்தியரெத்தினம் நேற்று (23.06.2022) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பழனித்துரை - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும் மட்டுவிலைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தையா - இளையாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மங்கையர்க்கரசி மற்றும் உருத்திராதேவி, பாலச்சந்திரன், கமலாதேவி, காலஞ்சென்ற சத்தியபாலன் (செல்வம்) ஆகியோரின் சகோதரியும் ரமணலதா, சாருலதா, சினேகலதா, ரதீஸ், குகதர்ஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும் சிவரூபன், காலஞ்சென்ற கிருஸ்ணசிங்கம், வேல்ராசா, தேவராசன், சிவப்பிரியா, தேனுகா, ஆகியோரின் மாமியாரும் கவாஸ்கர் - கஜந்தினி, சுலக்ஷன் - பிர்மிகா, தினுஷன், பிரசாந், மதுஷா - அஜந்தன், விதுஷா - தனுஷன், விதுஷன், இந்துஷன், சாருஜன், கஜீபன், அர்ச்சனா, லேனுஷா, குகசாத், கஸ்தூரி, பிவுசன், ரபிஷா, அபிநாந், சாத்விகா ஆகியோரின் பேர்த்தியும் ஜகிஷா, யஸ்வின், யஸ்மிகா ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24.06.2022) வெள்ளிக்கிழமை நண்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பி.ப 2 மணியளவில் மண்டைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
மண்டைதீவு.

(11967)

*தகவல்:* குடும்பத்தினர்
**077 273 7836, 077 923 2560**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெருக்கடியில் இருந்து இலங்கை மீள

# இந்தியா முழுமையான ஒத்துழைப்பை வழங்கும்

(டில்லி)

**தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக இலங்கை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளிற்கு இந்தியா தனது முழுமையான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வழங்கும் என இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.**



இந்தியாவிற்கான இலங்கை தூதுவர் மிலிந்தமொறகொடவுடனான சந்திப்பின் போது அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

இந்திய நிதியமைச்சர் இலங்கையின் பொருளாதார மீட்சி நடவடிக்கைகளிற்கான தனது முழுமையான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வெளியிட்டார் என இந்தியாவிற்கான இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் வழங்கிவரும் உதவிகளிற்காக இலங்கைத் தூதுவர் தனது நன்றிகளை தெரிவித்தார்,

குறிப்பாக தற்போதைய பயிர்ச்செய்கைக்காக அவசரமாக தேவைப்பட்ட யூரியாவை இறக்குமதி செய்வதற்காக 10 ஆம் திகதி வழங்கப்பட்ட 55 மில்லியன் தனியான கடனிற்காக அவர் நன்றி தெரிவித்தார்.

இதன்போது நிர்மலா சீதாராமன் இலங்கையின் பொருளாதார மீட்சி நடவடிக்கைகளிற்கு தனது முழுமையான ஆதரவை வெளியிட்டதுடன் மக்களின் மீண்டெழும் தன்மை காரணமாக இலங்கை கூடிய விரைவில் நெருக்கடியிலிருந்து மீளும் என்ற நம்பிக்கையையும் வெளியிட்டுள்ளார். (நி-6)

## இனப்படுகொலையை அங்கீகரிக்கக் கோரி பிரான்ஸில் எழுச்சிப் பேரணி

(பாரிஸ்)

ஈழத்தமிழர்களின் தேசிய அடையாளங்களை அதிகார பூர்வமாக அங்கீகரிக்கப்பட வேண்டும் என பிரான்ஸ் அரசாங்கத்தை வலியுறுத்தி புலம்பெயர் தமிழர்களால் எழுச்சிப் பேரணி ஒன்று நேற்று முன்தினம் பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவின் ஏற்பாட்டில் இடம்பெற்றிருந்தது.



ஈழத்தில் நடந்தது இனப்படுகொலை என்பதை பிரெஞ்சு அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும், தமிழ் மக்களை திட்டமிட்டு இனப்படுகொலை செய்த இலங்கை பேரினவாத அரசை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்திற்கு பாரப்படுத்தி சுயாதீன விசாரணை நடத்த வேண்டும். தமிழீழ மக்களால் ஏகமனதாக ஏற்றுக்காள்ளப்பட்ட வட்டுக்கோட்டை தீர்மானத்தின் அடிப்படையில் சுதந்திரத் தமிழீழம் மட்டும்தான் ஈழத் தமிழர்களுக்கு நிரந்தர அரசியல் தீர்வு என்பதை பிரான்ஸ் அரசாங்கத்திற்கும் சர்வதேசத்திற்கும் வலியுறுத்துகின்றோம் என்ற தொனிப் பொருளுடன் நடைபெற்றது. (நி-6-299)

## பெற்றோல் ஏற்றிய கப்பல் நாட்டுக்கு வருவதில் தாமதம்

### மின்சக்தி அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)


பெற்றோல் ஏற்றிய கப்பல் நாட்டை வந்தடைய சுமார் ஒரு நாள் தாமதமாகும் என மின் சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.



40,000 மெற்றிக் தொன் பெற்றோல் ஏற்றிய குறித்த கப்பல் நேற்று வியாழக்கிழமை காலை நாட்டிற்கு வரவிருந்த நிலையில், அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி-6)

## கொழும்பு ஐ.நா.அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம்




(கொழும்பு)

கொழும்பு பௌத்தலோக மாவத்தையில் அமைந்துள்ள ஐ.நா. அலுவலகத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

முறையற்ற கைதுகளை தவிர்க்க வேண்டும், எரிபொருள் வரிசைகளில் நீண்ட நேரம் காத்திருக்கும் மக்களுடன் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் முறுகலில் ஈடுபடுவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் போன்ற விடயங்களை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஐ.நா. அலுவலகத்தில் ஆர்ப்பாட்டக்காரர்களினால் மகஜரொன்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (நி-6)

## தமிழக மக்களின் மனிதாபிமான உதவிகளுடன் மேலுமொரு கப்பல் இலங்கைக்கு

(கொழும்பு)

தமிழக மக்களால் வழங்கப்பட்ட மனிதாபிமான உதவிகளுடனான மற்றுமொரு கப்பல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த கப்பல் நேற்று முன்தினம் கொழும்பு துறைமுகத்தை நோக்கி புறப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

குறித்த கப்பலில் 14,712 தொன் அரிசி, 250 தொன் பால்மா மற்றும் 38 தொன் அத்தியாவசிய உயிர்காக்கும் மருந்துகள் உட்பட 15,000 தொன் உள்ளடக்கங்கலாக இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்திய மக்களால் வழங்கப்பட்ட முதல் மனிதாபிமான உதவித்தொகை கடந்த மாதம் 22 ஆம் திகதி நாட்டை வந்தடைந்ததுடன் அதில் 9,000 மெற்றிக் தொன் அரிசி, 50 மெற்றிக் தொன் பால்மா மற்றும் 25 மெற்றிக் தொன் மருந்துகள் அடங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## இலங்கைக்கு உதவ முன்வரும் குவாட் அமைப்பு

(கொழும்பு)

குவாட் அமைப்பு இலங்கைக்கு உதவிகளை வழங்குவதற்கான வாய்ப்பு [illegible] பிரதமரும் பாதுகாப்பு அமைச்சருமான ரிச்சடர் மார்லெஸ் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலியா, இந்தியா, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகளை உள்ளடக்கிய இந்த அமைப்பானது, தற்போது இலங்கைக்கு எவ்வாறு உதவுவது என்பது தொடர்பாக கவனம் செலுத்தி வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேநேரம், அவுஸ்திரேலியா இலங்கைக்கு இடையில் மிகப்பெரிய பொருளாதார ஒத்துழைப்பிற்கான வாய்ப்புள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறிபந்தாட்ட போட்டி
## உடுப்பிட்டி மகளிர் சம்பியன்



வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களிற்கான எறிபந்தாட்டப் போட்டியில் 17, 20 வயது இரு பிரிவுகளிலும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

இதன் இறுதியாட்டம் கடந்த் செவ்வாய்க்கிழமை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதான.த்தில் நடைபெற்றது. 20 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான இறுதி யாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது.

இதில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி 25:16, 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித் துக் கொண்டது.


17 வயதிற்குட்பட்ட பெண்களிற்கான இறுதியாட்டத்தில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணியை எதிர்த்து நெல்லியடி மத்திய கல்லூரி அணி மோதியது.

முதலாவது செற்றில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி 25:21 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இரண்டாவது செற்றில் நெல்லியடி மத்திய கல்லூரி அணி பலத்த போராட்டத்தில் 25:23 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தனர்.

இதனால் வெற்றி தோல்வியை தீர்மானிக்கும் 3 ஆவது செற்றில் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 25:09 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுச் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டது (4-90)

### லண்டனில் நடைபெறவுள்ள
# குத்துச்சண்டை போட்டிக்கு
## கிளிநொச்சி இளைஞன் தெரிவு



கொமன்வெல்த்- 2022 குத்துச் சண்டைப் போட்டிக்கு கிளிநொச்சி தருமபுரம் நாதன் குடியிருப்பைச் சேர்ந்த விட்டாலிஸ் நிக்லஸ் என்னும் வீரர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவர் தேசியப் போட்டிகளில் வடமாகாணத்தினைப் பிரதிநிதித்துவப் படுத்திப் பல பதக்கங்களை வடமாகாணத்திற்காகப் பெற்றுக் கொடுத்துள்ளார். இவரது திறமை காரணமாக இலங்கை தேசிய குத்துச்சண்டை அணிக்குள் உள்வாங்கப்பட்டுப் பல தகுதி காண் போட்டிகளில் வெற்றியீட்டிக் கொமன்வெல்த் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

குறித்த போட்டி எதிர்வரும் ஜுலை மாதம் 28 ஆம் திகதி முதல் ஆகஸ்ட் 08 ஆம் திகதி வரை லண்டன் பர்மிங்ஹாம் நகரில் நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெறும் வீரர்கள் ஒலிம்பிக் தகுதிகாண் போட்டிகளில் பங்குபெறும் வாய்ப்புக்களைப் பெறவுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (4-18-316)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2647

**கவிதன்**




"சனியன்றே புறப்பட்டு வரவும்னு எழுதியிருந்த இடத்திலே 'றே'இல்லையாம்."

**அர்ச்சனா**

உங்களுக்கு ஒன்று தெரியுமா எங்க வீட்டுல லவ் மேரேஜ்க்கு ஓகே சொல்லிட்டானுங்க...



ஆனா நோ லவ்வர்

**கரன்**

சிறுவயதில் இந்த பொம்மை வாங்கிய அனுபவம் உண்டா...!



**பிரியா**

உ லகிலே ஓய்வு இல்லாமல் உழைக்கும் இரண்டு ஜீவன்கள் கடிகாரம் கூட பேட்டரி இல்லாத போது ஓய்வு எடுக்கும் "தாய்" "மனைவி" உயிர் இருக்குற வரைக்கும் ஓய்வு கிடையாது.



**ரூபன்**

நிம்மதியாக வாழ ரெண்டே வழிதான்... ஒன்னு ராஜாவா இருக்கனும்.



இல்லைனா எவன் ராஜாவா இருந்தா நமக்கென்னனு வாழனும்...

**பத்மா**

சோற்றுக்காக தான் வேலை என்பது நன்கு தெரிந்திருந்தும், நேரம் ஆகி விட்தென சாப்பிடாமல் வேலைக்குப் போவான் பாருங்க சார். அவன் தான் பாவப்பட்ட நடுத்தர வர்க்கம்!!!



நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு வாகன இறக்குமதிக்கான உரிமம்

## மனுஷ நாணயக்கார தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்கள், இலங்கைக்கு சட்டரீதியாக பணம் அனுப்பும் போது அவர்கள் அனுப்பும் தொகையின் அடிப்படையில் மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு அனுமதி வழங்கக்கப்படும் என்று கைத்தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை தொழிலாளர்களுக்கு வரியில்லா சலுகையில் வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்குவதற்கு அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது வாகன இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளதால் வங்கி முறையின் மூலம் சட்டரீதியாக பணம் அனுப்பும் வெளிநாடுகளில் பணிபுரியும் தொழிலாளர்களுக்கு மட்டுமே இந்த வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கப்படும் என்று குறிப்பிட்டார். (நி-6)

---


## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 01 . 12 . 1935



மறைவு 06 . 07 . 2021

### அமரர். நன்னிதம்பி நடேசரத்தினம்

எங்கள் குடும்ப தலைவரின் முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலியை முன்னிட்டு 25.6.2022 நாளை சனிக்கிழமை பகல் 10.30 மணியளவில் கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற உள்ளது. அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறும் உற்றார்,உறவினர் மற்றும் நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(11954)

Dr.சுப்பிரமணியம் வீதி,
சுன்னாகம்.

தகவல்:
குடும்பத்தினர்.


---


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 1935 – 09 – 23



மறைவு 2022 – 05 – 25

### அமரர். சோமநாதர் கந்தையா கனகசபை

(இரத்தினபுரம், கிளிநொச்சி)

2022.05.25 ஆம் திகதி புதன்கிழமை தேய்பிறை தசமி திதியில்
இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவருக்கு எமது இதய அஞ்சலி

கண்முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எம்முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்த நீங்கள்
விண்ணோக்கிச் சென்றாலும்
கண்விட்டு மறையாமல்
எந்நாளும் இருப்பீர்கள்

இன்று 2022.06.24 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய நிகழ்விற்கு தாங்களும் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(11957)

1594, 4 ஆம் குறுக்கு வீதி,
இரத்தினபுரம், கிளிநொச்சி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.


---

# இராசிபலன்

24.06.2022
ஆனி 10, வெள்ளிக்கிழமை
ஏகாதசி பின்னிரவு 2.24 மணிவரை
அச்சுவினி முற்பகல் 11.57 மணிவரை
சுபநேரம் 5.55-7.25 மணிவரை
இராகுகாலம் 10.25-11.55 மணிவரை
ஏகாதசி விரதம், அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம் - உத்தரம், அத்தம்

வளவன்

**மேஷம்** — வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பணியில் சிறு மன உளைச்சல் ஏற்படலாம், உடல் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், கனவு பலிதமுண்டு.

**கடகம்** — குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள், ஆன்மிக சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியமான நாள்.

**துலாம்** — குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, வழிபாட்டில் ஆர்வம் கூடும், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்** — வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**ரிஷபம்** — சேமிப்பில் சிறிது கரையலாம், குடும்பத்தினருடன் குதூகலம் தரும் பயணங்கள் இடம்பெறலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**சிம்மம்** — ஏட்டிக்குப் போட்டியாக இருந்தவர்கள் மனம் மாறுவர், வருங்காலத்திற்கான திட்டமொன்றைத் தீட்டுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** — மனக்குழப்பம் அகலும், பயணங்களால் பலனுண்டு, இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** — பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகலாம், குடும்பப் பொறுப்புகள் கூடும் நாள், முயற்சிகளில் முத்தான வெற்றி கிடைக்கும், வழிபாட்டால் பெருமை காண்பீர்கள்.

**மிதுனம்** — எண்ணிய காரியங்கள் எளிதில் நிறைவேறும் நாள், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், போசன சுகமுண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**கன்னி** — குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறைகண்டு கூறலாம், வாகன பழுதுச் செலவுகள் ஏற்படலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.

**தனுசு** — நெடுநாளைய கனவுகள் நனவாகலாம், கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, இல்லம் தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** — இறைவழிபாட்டில் ஆர்வம் கூடும், தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், எதிர்பாராத தனவரவுகள் இல்லம் வந்து சேரலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முன்னேற்றம் தரும்.

உன்னை [illegible] மிக அவசியம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர கும்பாபிஷேகத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஏற்பாடு

## கலாநிதி. ஆறு.திருமுருகன் பிரதமருக்கு கடிதம்

(குப்பிழான்)

திருக்கேதீச்சர ஆலய மஹா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு விசேட போக்குவரத்து ஏற்பாடு செய்ய வேண்டும் என திருக்கேதீச்சர திருப்பணிச் சபையின் உபதலைவர் செஞ்சொற் செல்வர் கலாநிதி. ஆறு.திருமுருகன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் ஒன்றை நேற்று முன்தினம் அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

சைவசமய ஆலய அறங்காவலர்கள், சைவசமய நிறுவனங்களைச் சார்ந்தவர்கள், அடியவர்கள் திரளாகச் சென்று வழிபாடு செய்ய வேண்டிய முக்கியநாள் எதிர்வரும்-04.07.2022 முதல் 06.07.2022. எனவே, இந்



நாளில் இலங்கையின் பல பாகங்களிருந்தும் சைவமக்கள் மன்னார் திருக்கேதீச்சரம் செல்ல வேண்டியிருப்பதால் பிரதமரும், போக்குவரத்துத் துறை அமைச்சரும் விசேட போக்குவரத்து ஒழுங்குகளைச் செய்ய முன்வர வேண்டும்.

தனிப்பட்ட ரீதியில் மக்கள் செல்வதற்கு எரிபொருள் பற்றாக்குறை பெரும் பாதிப்பாக இருப்பதனால் சைவ மக்கள் பல வருடங்களாக காத்திருந்த திருக்கேதீச்சர மஹாகும்பாபிஷேகத்தைத் தரிசிப்பதற்குத் தக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இந்தியாவில் இருந்து பலாலி நோக்கி வரவுள்ள விமான சேவை குறிப்பாகத் திருக்கேதீச்சர ஆலயத்தை அடிப்படையாக வைத்து ஜுலை முதல் வாரம் ஆரம்பிக்கப்படவிருப்பது அனைவரும் அறிந்ததே.

எனவே, இவ்விடயம் தொடர்பாகப் பிரதமரும் போக்குவரத்து அமைச்சரும் தமிழ் அரசியல்வாதிகளும் மிகுந்த அக்கறையுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-18)

# கச்சாயில் வாள்வெட்டு இளைஞன் படுகாயம்

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

சாவகச்சேரி தபாற்கந்தோர் வீதியைச் சேர்ந்த 26 வயதான குறித்த இளைஞன் தனது உறவினர் ஒருவருடன் கொடிகாமம் பகுதிக்கு சென்றிருந்த நிலையில் இனந்தெரியாத நபர்கள் இளைஞன் மீது வாள் வீச்சு தாக்குதல் நடத்திவிட்டு தப்பித்துச் சென்றுள்ளனர்.

தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் குறித்த இளைஞன் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

தாக்குதல் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# நூல் வெளியீடு

(சாவகச்சேரி)

கவிஞர் நந்தினியின் "சிந்தை கவரும் சிறுவர் கதைகள்" நூல் வெளியீட்டு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யா/போக்கட்டி அ.த.க பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெறவுள்ளது. (4-6-30)

## பெரியபுலம் மகா வித்தியாலயத்தின்

# ஆண்டு விழாவை முன்னிட்டு இசை வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பெரியபுலம் மகா வித்தியாலயத்தின் 200 ஆவது ஆண்டு விழாவை முன்னிட்டு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலையின் கனகசிங்கம் மண்டபத்தில் இசை வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

பாடசாலையின் பழைய மாணவன் ரஜீவனின் இசையமைப்பில் உருவான "200 ஆவது ஆண்டு விழா நிறைவு கீதம்", .புதுப் பொலிவுடன் இசையமைக்கப்பட்ட "பாடசாலைக் கீதம்" என்பன வெளியீடு செய்து வைக்கப்படவுள்ளன.

பாடசாலையின் பழைய மாணவரும் யாழ்.பல்கலைக்கழகத்தின் கல்வியில் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் ம.சத்தியகுமார் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மேலும் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழகத்தின் நடனத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி அருட்செல்வி கிருபைராஜா, சிறப்பு விருந்தினர்களாக பாடசாலையின் அதிபர் ந.பரமேஸ்வரன், இசைவாணர் மு.கோபாலகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

# சுகாதார சேவை ஸ்தம்பிதமடைந்தால் அரசு பொறுப்புக் கூற வேண்டும்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் கிடைப்பதற்கு ஒத்துழைக்காவிடில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படுமென யாழ்.போதனா மருத்துவமனையின் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

அக் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், வட மாகாணத்தில் உள்ள மக்கள் அனைவருக்குமான ஒரே ஒரு போதனா மருத்துவமனையாக இருக்கும் எமது மருத்துவமனை ஆளணிப் பற்றாக்குறை இருந்தபோதும் சிறப்பாக சேவையாற்றி வருகிறது.

ஆனால், அண்மைக்காலமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையானது எல்லோரையும் போல் எம்மையும் வெகுவாகப் பாதித்துள்ளது.

அதிலும் எரிபொருள் இன்மை காரணமாகவும் அதன் சீரற்ற வழங்கல் காரணமாகவும் மருத்துவ சேவை முடங்கும் ஆபத்து உருவாகியுள்ளது.

சுகாதார அமைச்சு மருத்துவமனை உத்தியோகத்தர்களுக்கு எரிபொருள் கிடைப்பதை உறுதி செய்யும் முகமாக ஒவ்வொரு வெள்ளிக்கிழமைகளிலும் தெரிவுசெய்யப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மருத்துவமனை மற்றும் சுகாதார ஊழியர்களுக்கு மாத்திரம் எரிபொருளை. மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கும் முடிவை எடுத்துள்ளது.

இது மிகவும் வரவேற்கத்தக்க விடயமாக இருப்பினும் அதற்கு செயல் வடிவம் கொடுப்பதற்கு. அரச அதிபரும் பிரதேச செயலர்களும் பொலிஸ் மற்றும் பாதுகாப்பு துறையினரும் மனப்பூர்வமாக முன்வர வேண்டும். அவ்வாறு இல்லையெனில் அத்தியாவசிய சேவைகளில் ஒன்றாகிய சுகாதார சேவை ஸ்தம்பிக்கப்படுவதற்கு பொறுப்புக்கூற வேண்டிய நிலைமை ஏற்படும் என தெரிவித்துள்ளது. (4-6-33)

# இலகுவாக கிடைக்கும் பொருட்கள் மூலம் பயோ டீசல், பெற்றோல் உற்பத்தி

(குப்பிழான்)

இலகுவாகக் கிடைக்கும் பொருட்களைக் கொண்டு பயோ பெற்றோல் மற்றும் பயோ டீசல் என்பவற்றைக் குறைந்த விலையில் உற்பத்தி செய்ய முடியும் என யாழ்ப்பாணம் நவாலியைச் சேர்ந்த ஓய்வு நிலை ஆய்வு கூட உதவியாளர் செல்வராசா சுரேஷ்குமார் தெரிவித்தார்.

இதன்போது தேங்காய் எண்ணெய், வேப்பெண்ணெய், சாம்பல் போன்ற இலங்கையில் இலகுவாகக் கிடைக்கும் மூலப் பொருட்களை வைத்துப் பயோ டீசலினை இலகுவாக தயாரிக்க முடியும் எனவும், நீர் மற்றும் சிரட்டைக்கரி போன்ற காபன் வகைகளைப் பயன்படுத்திப் பயோ பெற்றோலினை இலங்கையில் உற்பத்தி செய்ய முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதற்கான செய்முறை விளக்கத்தினையும் அவர் நிகழ்த்திக் காட்டினார்.

பயோ டீசலினைச் சாதாரணமாக வீட்டிலேயே உற்பத்தி செய்ய முடியும் எனவும் பயோ பெற்றோல் தயாரிப்பதற்கு சுமார் 50 மில்லியன் முதலீடு தேவைப்படும் எனவும் இதற்கு அனுசரணையாளர்களும் அரசின் ஒத்துழைப்பும் கிடைக்கும் பட்சத்தில் சூழலுக்குப் பாதிப்பில்லாத எரிபொருளினை மிகவும் குறைந்த விலையில் உற்பத்தி செய்து எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (4-6-18-33)

# தவறவிடப்பட்ட பணம் ஒப்படைப்பு

(அராலி)

யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் 90 ஆயிரம் ரூபாய் பணத்தை பேருந்தில் தவறவிட்ட தாயொருவரின் பணத்தொகை யாழ்.மாவட்ட பிராந்திய போக்குவரத்துப் பொலிஸாரால் மீட்கப்பட்டு குறித்த தாயிடம் கொடுத்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து சுன்னாகம் நோக்கி பயணித்த பேருந்து ஒன்றிலேயே நேற்று முன்தினம் குறித்த பெண் பணத்தை தவறவிட்ட நிலையில் போக்குவரத்துப் பொலிஸார் கண்டெடுத்து ஒப்படைத்துள்ளனர். (4-6-18-104)

# ஆசிரியர்கள் அவமதிக்கப்பட்டால் சேவையை புறக்கணிப்போம்

## இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் ஆசிரியர்களுக்கு அவமதிப்பு தொடருமாயின் சேவையை புறக்கணிக்க நேரிடும் என இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

தற்போது நாட்டில் உள்ள சூழ்நிலை எல்லோருக்கும் பொதுவானது. ஆனால் ஆசிரியர்களின் கடமையும் அவர்கள் ஆற்றும் பணியும் வித்தியாசமானது.

இந்த நிலையில் எரிபொருளுக்காக ஆசியர்களைக் காக்க வைப்பதும் அவர்களோடு அநாகரிகமாக நடந்து கொள்வதனையும் ஏற்க முடியாது.

தயவு செய்து எரிபொருள் நிரப்பு நிலைய உரிமையாளர்களும் அரசாங்க அதிபர்களும் கல்வி அமைச்சும் கல்வித் திணைக்களமும் இதற்கு விரைந்து தீர்வு காண வேண்டும். கைகூப்பி வணங்க வேண்டிய ஆசிரியர்களை கைகாட்டி வெருட்டும் அளவிற்கு வைக்காதீர்கள். அது ஒட்டுமொத்த சமூகத்திற்கும் கேடாகும்.

இத்தகைய நிலை தொடருமாக இருந்தால் ஆசிரிய பணியில் இருந்து ஒதுங்க வேண்டிய நிலை ஏற்படும்.

கிளிநொச்சியில் ஒரு ஆசிரியை விட்ட கண்ணீர் ஒட்டுமொத்த ஆசிரியர்களும் விட்ட கண்ணீருக்குச் சமமானது என மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (4-6-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# நன்கொடையாக கிடைக்கும் மருந்துகளை நாட்டிற்கு எடுத்து வரும் எயார்லைன்ஸ்

(கொழும்பு)

நன்கொடையாளர்களால் வழங்கப்படும் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை, இலங்கைக்கு கொண்டுவந்து சேர்க்கும் பணியை ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ஆரம்பித்துள்ளது.

அதற்கமைய, பிரான்ஸ், இந்தோனேசியா, ஐக்கிய இராச்சியம், மலேசியா, குவைத் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் உள்ள நன்கொடையாளர்களால் வழங்கப்படும் மருத்துவப் பொருட்களை தொடர்ச்சியாக இலங்கைக்கு கொண்டு வந்து சேர்ப்பதற்கு ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் நடவடிக்கை எடுத்துள்ளது. (நி-6)

# இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் பேச்சு



(கொழும்பு)

நாட்டிற்கு விஜயம் செய்துள்ள இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் குவாட்ரா உள்ளிட்ட தூதுகுழுவினருக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்த சந்திப்பானது கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் இன்று முற்பகல் இடம்பெற்றது.

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் வினய் குவாட்ரா, இந்திய பிரதான பொருளாதார ஆலோசகர் வீ. ஆனந்த் நாகேஸ்வரன் மற்றும் இந்திய பொருளாதார அலுவல்கள் திணைக்களத்தின் செயலாளர் உள்ளிட்ட தூதுக்குழுவினர் இந்திய விமான சேவைக்கு சொந்தமான விசேட விமானத்தினூடாக நேற்று காலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இதனையடுத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து நாட்டின் தற்போதைய பொருளாதார நெருக்கடி தொடர்பான விடயங்கள் குறித்து ஆராய்ந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, பிரதமர் ரணில் விக்ரமசிங்கவையும் அவர்கள் சந்தித்து கலந்துரையாடியுள்ளனர். (நி-6)

## கடதாசி தட்டுப்பாடு

# மின் கட்டண பட்டியலை வழங்குவதில் மீண்டும் சிக்கல்

(கொழும்பு)

கடதாசி தட்டுப்பாடு மற்றும் மின்சார சபை எதிர்நோக்கியுள்ள நிதிப்பிரச்சினை காரணமாக மின் கட்டண பட்டியலை வழங்குவதில் மீண்டும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

சில இடங்களில் மாதாந்த மின் கட்டணப்பட்டியல் வழங்கப்படவில்லை என மின்சார சபையின் பாவனையாளர் இணைப்பு அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் நாலக்க ஜீவ தெரிவித்துள்ளார்.

இதே வேளை , பாவனையாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் பாரிய நீர் கட்டண பட்டியலுக்கு பதிலாக சிறியளவான பட்டியலை வழங்குவது தொடர்பில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபை அவதானம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பில் குழுவொன்றின் ஊடாக மதிப்பீடுகள் செய்யப்பட்டு வருவதாக தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (நி-6)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 3<br>கி.பா: 12 ½ சூரி 9 செவ் 10 இல்<br>தகைமை/தொழில்: BBA பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர் உயரம்: 176 cm<br>எதிர்பார்ப்பு: அரச தொழில் (பட்டதாரி)<br>தொ.இ: B/12753 | பிறப்பு: 1994 இந்து<br>நட்சத்திரம்: உத்திரட்டாதி 1<br>கி.பா: 35 சூரி 2 செவ் 11 இல்<br>தகைமை/தொழில்: BSc (Hons) Demonstrator<br>எதிர்பார்ப்பு: BSc,B.com பட்டதாரி உத்தியோகம் உள்நாடு மட்டும்<br>தொ.இ:G/12763 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அத்தம் 4<br>கி.பா: சூரி 4 செவ் 7 இல் உயரம்: 165 cm<br>தகைமை/தொழில்: சொந்தக்கடை (வியாபாரம்)<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12756 | பிறப்பு: 1993 இந்து நட்சத்திரம்: சுவாதி 1<br>கி.பா: 51 சூரி 11 செவ் 12 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:National Diploma in Teaching(College) ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: அரச,தனியார் தொழில்<br>தொ.இ: G/12765 |
| பிறப்பு: 1990இந்து<br>நட்சத்திரம்: ரோகிணி 4<br>கி.பா: 18 ¼ சூரி 11 செவ் 7 இல்<br>உயரம்: 172 cm<br>தகைமை/தொழில்: ICT ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு : சாதாரண படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/12757 | பிறப்பு: 1992 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம் 1<br>கி.பா:42 ½ சூரி 9 செவ் 8 இல்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி நிர்வாகி (தனியார் தொழில்)<br>எதிர்பார்ப்பு: அரசதொழில் விரும்பத்தக்கது படித்த மணமகன்<br>தொ.இ:G/12766 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம் : ரேவதி 2<br>கி.பா :27 ½ சூரி 11 செவ் 5 இல்<br>உயரம்:6'<br>தகைமை/தொழில்: MDS Dentist (USA)<br>எதிர்பார்ப்பு:பட்டதாரி (USA)<br>தொ.இ: B/12760 | பிறப்பு: 2000 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 1<br>கி.பா: சூரி.செவ்1 இல் உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்:A/L கணித பிரிவு<br>எதிர்பார்ப்பு: படித்தவர்<br>தொ.இ:G/12768 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.




**கெடுவாய் மனனே! கதிகேள் கரவாது**
**இடுவாய்; வடிவேல் இறைதாள் நினைவாய்;**
**சுடுவாய் நெடுவேதனை தூள்படவே;**
**விடுவாய் விடுவாய் வினையாவையுமே.**

(கந்தர் அனுபூதி (07))

வேலாயுதப் பெருமானின் திருவடியைச் சிந்தையுள் கொள்.

தொடர்ந்து வருகின்ற பிறவித் துன்பத்தை, துயரைப் பொடியாக்கி (வேலால்) வினைகளை விட்டு அனுபூதி பெறுவாய்.

வேலின் பெருமையை உணர்ந்த மெய் ஞான அறிவு பெற்ற முன்னோர் 1760 ஆம் ஆண்டளவில் வேல் வழிபாட்டுடன் சிறுகொட்டிலில் (வடிவேல் இறைதாள் நினைவாய் எனும் கந்தர் அனுபூதி) பக்தியிற் சிறந்த காரைநகர்ப் பண்பினை வளர்க்கும் திக்கரையில் முத்தமிழ் முருகன் எழுந்தருளி முத்திக்கு வழியைக் காட்டுகிறான் களபூமி திக்கரை முருகன்.

இது ஆலய மீது சிவத்திரு கார்த்திகேசுப்புலவர் (சிவாச்சாரியார்) 1870 இல் முருகன் மீது திக்கரைத் திரிபந்தாதி பாடியுள்ளது.

1902 ஆம் ஆண்டில் இருந்து 2008 ஆம் ஆண்டு வரையும் ஆறு தடவை கும்பாபிஷேகமும், 262 ஆண்டுகள் கடந்தும் சச்சிதானந்த வடிவமாக இதம், சல்லாபம், விநோதன் (பேசுதல், செய்தல், நினைத்தல்) மூன்றும் நமக்கு உண்டாக அருள்மிகு திக்கரை முருகனை, அருணகிரிநாதர் திருப்புகழ் கந்தர் அனுபூதி, கந்தர் அலங்காரம், கந்தர் அந்தாதி ஓதி கந்தன் திருவருள் பெற்று உய்வோமாக.

### முருகன் துணை


### பக்தோற்சவம் பார்த்து பரமன் அருள் பெறுவோம்

திக்கரை முருகன் திருவிழாவில் ஆறாவது நாளான இன்று வழமை போல் பக்தோற்சவமாகவும், மாம்பழத் திருவிழாகவும் நடைபெற திருவருள் பாலித்துள்ளது. சைவர்களின் அடையாளமாக இருப்பது விபூதியும் உருத்திராக்கமும் ஆகும். திருமுறைகள் இவற்றை அறுதியிட்டு உரைக்கின்றன. இதன் மகிமையை உணர்ந்தும், உணர்த்தவும் முருகன் பகல் உற்சவத்தின் போதும் திருமுறை இசையோடும், இரவு திருப்புகழ் இசையோடும் திருவீதியுலா வந்து திருவருள் பாலிப்பார். இந்த மஹோற்சவத்தின் மகிமையை உணர்ந்து அடியார்கள் திரளாக வந்து பங்கு பற்றுவதுடன் அபிஷேகத் திரவியங்களையும், பூ வகைகளும் முடிந்தளவு வழங்கி முருகன் பேரருள் பெற்றுய்வீர்களாக. "ஓம் திக்கரை முருகா வாழ்க"

நாள்தோறும் நாள்தோறும் மனத்திலிருக்கும் மாசினை அகற்ற வேண்டும். அம்மாசு 'நான்' 'நான்' என்றும் தற்போதும் (பேதம் இருந்தால் பிரம்மம் சித்திக்காது) நான் என்றும் ஆன்ம போதத்தினால் வரும் ஆசை; ஆசையினால் வரும் கோபம்; கோபத்தினால் வரும் மயக்கம்; பிறரைக் கெடுக்கின்ற பகை முதலிய மனத்திலுள்ள அழுக்குகளை மாற்றி அகற்ற வேண்டுமானால் 'கந்தர் அனுபூதி' ஒரு தெய்வீக மருந்து. பூதி என்றால் ஒன்றுபடுதல், அனு என்றால் தொடர்வது. கந்தரோடு ஒன்றுபடுவது கந்தர் அனுபூதி. நாம் பரகதி, சிவகதி அடைய விரும்பின், முருகன் திருவடிகளை அடைய விரும்பின் கந்தர் அனுபூதி நாள்தோறும் ஓதுவோம்.

### காரைநகர் களபூமி திக்கரை முருகன் துணை

வேல் பிடித்து நிற்பவனின் கால் பிடித்து தொழுதால், நம்மை கரம் பிடித்து உயர்த்துவான். தமிழால் வைதாரையும் வாழ வைக்கும் முருகன் மனிதர்களின் துயரங்களை ஆற்றி பிறவிப் பிணி போக்குவான். திருப்புகழால் துதிப்போம் அருள் பெறுவோம்.



ஓம் முருகா, ஓம் குமரா, ஓம் குகா, ஓம் கந்தா

**வாழ்க முருகன் அருள் வெல்க முருகன் சீர்போற்றி அருளை மனிவரடி**

க.கு.க. சிவபாலன் (K.K.K)

(C-4530)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 79

### மரணத்தருவாயில்

# அலெக்ஸாண்டரின் இறுதி ஆசை



மாவீரன் அலெக்ஸாண்டர் மரணத் தருவாயில் தனது படைத் தளபதிகளை அழைத்து தனது இறுதி ஆசையாக மூன்று விருப்பங்களைக் கூறினான்.

என்னுடைய சவப்பெட்டியை உலகின் தலை சிறந்த மருத்து வர்கள் தான் தூக்கிக் கொண்டு செல்ல வேண்டும்.

நான் இதுவரை சேர்த்த பணம், தங்கம், விலை உயர்ந்த இரத்தினக் கற்கள் போன்றவைகளை என்னுடைய இறுதி ஊர்வலத்தின் பாதையில் தூவிக் கொண்டு செல்ல வேண்டும்.!என் கைகளை சவப்பெட்டியின் வெளியில் தொங்க விட்டுக்கொண்டு வரும்படி செய்ய வேண்டும்.!

தளபதிகளில் ஒருவர் அலெக்ஸாண்டரின் அசாதாரண விருப்பத்தால் மிகவும் ஆச்சரியப்பட்டு அதனை விவரிக்கும்படி கேட்டார்.

அதற்கு அலெக்ஸாண்டர் கூறிய பதில்கள் தான் மிகவும் முக்கியமானவை.!!

தலைசிறந்த மருத்துவர்களால் கூட என்னை நோயிலிருந்து காப்பாற்ற முடியாமல் , சாவை தடுக்க முடியாது என்பதை இந்த உலகத்திற்கு தெரியப்படுத்துவதற்காக !

நான் இந்த பூமியில் சேகரித்த, கைப்பற்றிய பொருட்கள் பூமிக்கே சொந்தமானவை என்பதை தெரியப்படுத்துவதற்காக.!

எனது கைகள் காற்றில் அசையும்போது, மக்கள் வெறும் கையுடன் வந்த நான் வெறும் கையுடன் போவதை உணர்ந்து கொள்வார்கள் எனக் கூறினார்.

நாம் இந்த பூமியில் பிறக்கும்போது கொண்டு வருவதெல்லாம் நாம் இந்த பூமியில் வாழும் காலமாகிய "நேரம் மட்டுமே:"

உங்கள் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் நீங்கள் கொடுக்கும் விலை உயர்ந்த பரிசு உங்களின் நேரம் மட்டுமே.

**அன்பு வாசகர்களே!**
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

# கொரோனா தொற்று குழந்தைகளுக்கு 2 மாதம் நீடிக்குமாம்- ஆய்வில் தகவல்

(டென்மார்க்)

கொரோனாவால் பாதிக்கப்பட்ட 14 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு தொற்றின் அறிகுறிகள் 2 மாதங்களுக்கும் மேலாக நீடித்து இருப்பது ஆய்வில் தெரிய வந்துள்ளதாக "லேன்செட் சைல்டு அன்ட் அடோல்ஸ்சென்ட் ஹெல்த்" இதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த ஆய்வு டென்மார்க்கில் உள்ள குழந்தைகளிடம் நடத்தப்பட்டுள்ளது.

அதாவது நீண்ட கால அறிகுறிகள் குழந்தைகளிடையே தொற்று இருப்பதை குறிப்பதாகவும், இது போன்ற பிரச்சினைகளை கண்டறிந்து சிகிச்சை அளிக்க வேண்டிய அவசியம் ... அதில் கூறப்பட்டுள்ளது.

# லிதுவேனியா வி

# விளைவு கடு

## ரஷ்யா எச்

**(மொஸ்கோ)**
**லிதுவேனியா விதித்துள்ள தடையை உடனடியாக**
**நேரிடும் என ரஷ்யா எச்சரித்துள்ளது.**

ஐரோப்பிய நாடுகள் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை விதித்துள்ளதன் பின்னணியில் அதை காரணம் காட்டி தற்போது ரஷ்ய பொருட்களை ரயில் பாதை வழியாக கலினின்கிரேட்க்கு கொண்டு செல்ல லிதுவேனியா திடீரென தடை விதித்துள்ளது.

இதனால்
பொருட்கள், ந
முக்கிய பொ
னின்கிரேட்க்
செல்ல முடிய

# உக்ரைன்- மோல்டோவா நா
# ஐரோப்பிய ஒன்றிய வேட்பாள

(பிரஸ்ஸல்ஸ்)

ஐரோப்பிய ஒன்றிய மாநாட்டின் போது, உக்ரைன் மற்றும் மோல்டோவா ஆகிய நாடுகளை வேட்பாளராக 27 உறுப்பு நாடுகளும் அங்கீகரிக்கும் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பெல்ஜியம் நாட்டின் பிரஸ்ஸல்ஸ் நகரில் ஐரோப்பிய ஒன்றியத்தின் 2 நாள் மாநாடு நேற்று வியாழக்கிழமை ஆரம்பமாகியது.

இதன்போது, ஐரோப்பிய ஒன்றிய வேட்பாளராக விண்ணப்பித்திருக்கும் உக்ரைன் மற்றும் மோல்டோவா ஆகிய




# இணையவழி தாக்குதல்களுக
## தயாராகும் ரஷ்யா

(மொஸ்கோ)

ரஷ்யா மேற்கு நாடுகளுக்கு எதிராக குறிப்பாக அமெரிக்கா உட்பட சுமார் 42 நாடுகளுக்கு எதிராக இணைய வழி தாக்குதலை மேற்கொள்ள இருப்பதாக மைக்ரோ சொப்ட் நிறுவனம், தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது.


அமெரிக்கா ரஷ்யாவை தோற்கடிப்பதற்காக உக்ரைனுக்கு பல பில்லியன் பெறுமதியிலான ஆயுத தளபாடங்களை கொடுத்து உதவி செய்து வரும் நிலையில், அமெரிக்காவின் ... உதவியினால் தான் இன்னும் ரஷ்யாவினால் உக்ரைன் போரை முடிக்க முடியாமல் இழப்புக்கை
மாக சந்தித்து வருவதாக ச
செய்திகள் தெரிவித்து வரும் நி
தற்போது ரஷ்யா இணைய
தாக்குதலுக்கு தயாராகி வ
தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதல் ரஷ்யா
மேற்கு நாடுகளுக்கு
மேற்கொள்ளப்படுமாக இரு
அனைத்து நவீன தொழில்
ளும் முழுமையாக முடங்கு
மைக்ரோ சொப்ட் நிறுவனம்
அறிக்கை யில் எச்சரிக்கை வி
ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...விதித்த தடையை மீளப்பெறாவிட்டால் ...டுமையானதாக இருக்கும் ...ச்சரிக்கை

...ாக மீளப் பெறாவிட்டால் கடும் விளைவுகளைச் சந்திக்க



...ால் கட்டுமானப் ...ர். நிலக்கரி உட்பட ...பொருட்களை கலி ...ரட்க்கு கொண்டு ...டியாத நிலை ரஷ்யாவுக்கு ஏற்பட்டுள்ளது.

லிதுவேனியாவின் இந்த முடிவை ரஷ்யா கடுமையாக எதிர்த்துள்ளது.

இது குறித்து ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில், "பொருட்களை கொண்டு செல்ல லிதுவேனியா விதித்துள்ள தடையை உடனடியாக வாபஸ் பெற வேண்டும். இல்லாவிட்டால் கடும் பின்விளைவுகளை சந்திக்க நேரிடும்.

அது லிதுவேனியா மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கும். கலினின் கிரேடு பகுதிக்கும் ரஷ்யாவுக்கு இடையிலான சரக்கு போக்குவரத்துக்கான தடை நீடித்தால், லிதுவேனியா மீது நடவடிக்கை எடுக்க ரஷ்யாவுக்கு அனைத்து உரிமைகளும் உள்ளன" என்று எச்சரித்துள்ளது. (நி-6)

## ...நாடுகளுக்கு ...ளர் அந்தஸ்து

...நாடுகள் வேட்பாளராக அங்கீகரிக்கப்படவுள்ளன.

நேட்டோவில் இணையக் கூடாது என்ற வலியுறுத்தலை ஏற்காததால் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்துள்ளது.

இந்த நிலையில் உக்ரைனுக்கு நிதி உதவி மற்றும் ஆயுத உதவி செய்து வரும் ஐரோப்பிய ஒன்றியம், அந்நாட்டை உறுப்பினராக சேர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுத்து வருகிறது.

உறுப்பு நாடுகளுக்கு மட்டுமே நேரடியாக இராணுவ உதவி செய்ய முடியும். எனினும், ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைவது என்பது எளிதான காரியம் அல்ல. அதற்கான நடைமுறைகள் முடிந்து இறுதிக்கட்டத்தை அடைய பல ஆண்டு காலம் ஆகும். உக்ரைன் கடந்த பெப்ரவரி 28 ஆம் திகதி விண்ணப்பித்திருந்தது.

இந்த நிலையில், அந்நாட்டுக்கு நம்பிக்கை அளிக்கும் வகையில் முதலில் வேட்பாளர் அந்தஸ்து வழங்க ஐரோப்பிய ஒன்றியம் முடிவு செய்துள்ளது; அதேபோல் மோல்டோவா நாட்டுக்கும் வேட்பாளர் அந்தஸ்து வழங்கப்படும் என்று தெரிகிறது. (நி-6)

## பிரித்தானியாவில் பணவீக்கம் 9.1% ஐ எட்டியது

(லண்டன்)

பிரித்தானியாவில் உணவு, எரிசக்தி மற்றும் எரிபொருள் விலைகள் கடந்த 40 ஆண்டுகளை விட மிக வேகமாக தொடர்ந்து அதிகரித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தின் பணவீக்கம், விலை அதிகரிப்பு, ஏப்ரல் மாதத்தில் 9% ஆக இருந்து 12 மாதங்களில் 9.1% ஆக உயர்ந்துள்ளது என தேசிய புள்ளியியல் அலுவலகம் தெரிவித்துள்ளது.

கடந்த 1982 ஆம் ஆண்டு மார்ச் பதிவாகியது போன்றே தற்போதும் பணவீக்கம் மற்றும் விலைவாசி அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இந்த ஆண்டு பணவீக்கம் 11% ஆக இருக்கும் என்று இங்கிலாந்து வங்கி எச்சரித்துள்ளது.

உணவு மற்றும் மது அல்லாத பானங்களின் விலை உயர்வு மே மாதத்தில் எரிபொருளின் பணவீக்கத்திற்கு காரணமானது.

அத்தோடு பாண், தானியங்கள் மற்றும் இறைச்சி ஆகியவற்றில் மிகப்பெரிய விலை அதிகரிப்பு காணப்பட்டது என்றும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

உக்ரைன்-ரஷ்யா போர் காரணமாக கோதுமை மற்றும் மக்காச்சோள விநியோகம் உலகின் இரு பெரிய ஏற்றுமதியாளர்களிடமிருந்து கட்டுப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ...தக்கு

...களை அதிக ...க சர்வதேச ...ம் நிலையில் ...ணய வழித் ... வருவதாக

...ஷ்யாவினால் ... எதிராக ... இருந்தால் ...ில்நுட்பங்க ...ங்கும் என ...னம் தனது ...கை விடுத்துள் (நி-6)


## பூகம்பத்தால் மோசமாக பாதிக்கப்பட்ட ஆப்கான் சர்வதேச உதவியைக் கோரும் தலிபான்கள்

(காபூல்)

பூகம்பத்தால் பாதிக்கப்பட்டுள்ள ஆப்கானிஸ்தானுக்கு உதவி செய்யுமாறு தலிபான்கள் சர்வதேசத்தை கோரியுள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை 6.1 ரிக்டர் அளவில் பாரிய பூகம்பம் ஏற்பட்டது.

இந்த பூகம்பத்தால் 1000 பேர் உயிரிழந்துள்ளதோடு, 1,500 பேர் வரை காயமடைந்துள்ளனர். பெரும்பாலானோர் இடிபாடுகளுக்குள் சிக்கியுள்ளனர்.



தென்கிழக்கு பக்திகா மாகாணம் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதுடன் அவசரகால தங்குமிடம் மற்றும் உணவு உதவி க[illegible] வழங்க வேண்டும்.

கனமழை மற்றும் போதிய வசதிகள் இல்லாமையால் மீட்பு பணிகள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதன் காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க நேரிடும் என அச்சம் நிலவுகின்றது.

இரண்டு தசாப்தங்களில் ஆப்கானிஸ்தானை தாக்கிய மிக மோசமான பூகம்பம் இதுவாகும். கடந்த ஆண்டு ஆப்கானிஸ்தானை கைப்பற்றிய தலிபானுக்கு இது ஒரு பெரிய சவாலாகும்.

கோஸ்ட் நகரத்திலிருந்து சுமார் 44 கி.மீ. (27 மைல்) தொலைவில் ஏற்பட்ட நிலநடுக்கம் பாகிஸ்தான் மற்றும் இந்தியா வரையிலும் உணரப்பட்டது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பலப்பெருமாள் குளத்தில் தேக்கங்காடுகள் அழிப்பு

## பிரதேச மக்கள் சுட்டிக்காட்டு

(அக்கராயன்)

**முல்லைத்தீவு அம்பலப்பெருமாள் குளம் கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள தேக்கு மரக் காட்டில் இருந்து தேக்கு மரங்கள் தேவையற்ற முறையில் வெட்டப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.**

1996 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளினால் குறித்த தேக்கங்காடு 600 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் உருவாக்கப்பட்டது. குறைந்தது 35 ஆண்டுகளுக்குப் பின்னர் தான் தேக்கு மரங்கள் வெட்டப்பட வேண்டும். தற்போது கிராம மட்ட பொது அமைப்புகளின் இணக்கப்பாடுகள் இன்றி தேக்கு மரங்கள் வளர்ச்சி அடைவதற்கு முன்பே அழிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இதனை தடுத்து நிறுத்துவதற்கு முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், துணுக்காய் பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவின் இயற்கை வளத்தினை வெளியில் கொண்டு செல்வதற்கு கிராம மட்ட பொது அமைப்புகளின் இணக்கப்பாடுகள் அவசியமானது என்பதை அதிகாரிகள் தெரிவித்து வரும் நிலையில் அம்பலப் பெருமாள் குளத்தின் ஒரு வன வளம் வளர்ச்சி அடைவதற்கு முன்னரே அழிக்கப்பட்டு வருவதாகவும் கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (4-6-350)



தற்போதைய பொருளாதார நெருக்கடி காலத்தினை கருத்திற் கொண்டு பொதுமக்களை வீட்டுத்தோட்டம் செய்ய ஊக்குவிக்கும் நோக்கோடு மரக்கறி பயிர் விதைகள் அடங்கிய பொதிகள் மற்றும் நாற்றுக்கள் கொண்ட நடமாடும் விற்பனை சேவை ஒன்று வவுனியா விவசாய திணைக்களத்தின் விதைகள் நடுகல் பிரிவினரால் வவுனியா நகரில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப் பட்டது. (படம்-சதீஸ்)

## நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்

(ஈச்சமோட்டை)

யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் நிறுவுநர் நினைவு தினமும் பரிசளிப்பு விழா 2022 இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் பாவலர் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் தெல்லிப்பழை மகா ஜனக் கல்லூரியின் அதிபர் ம. மணிசேகரன் தலைமையில் நடைபெறும். (4-6-105)



வடமாகாண கிராம அபிவிருத்தித்திணைக்களமும் விவசாயத்திணைக்களமும் இணைந்து பிரதேசம் தோறும் நடத்துகின்ற வீட்டுத்தோட்ட விழிப்புணர்வு கருத்தரங்கு ஈவினை தெற்கு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஏற்பாட்டில் பொதுநோக்கு மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆ.கோகுலன் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் சசீலன் ,விவசாயப்போதனாசிரியர் திருமதி. மஞ்சரி உள்ளிட்டோர் கலந்துகொண்டு கருத்துரை வழங்கினர்.

# உணவு நெருக்கடிக்குள் முல்லை. கடற்றொழிலாளர்கள்

(அக்கராயன்)

முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் எரிபொருள் நெருக்கடி காரணமாக கடலுக்குச் செல்ல முடியாத நிலையில் தற்போது உணவு நெருக்கடியினை எதிர் கொண்டுள்ளனர்.

இந்நிலையில் உணவுப் பொருட்களை பெற்றுக் கொடுப்பதற்கு மாவட்ட செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்களினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாள் ஒன்றிற்கு மீன் பிடிப் படகு ஒன்று தொழிலில் ஈடுபடுவதற்கு ரூபாய் 3000 இற்கு மண்ணெண்ணெய் தேவைப்பட்ட நிலையில் தற்போது மண்ணெண்ணெயை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் கடற்றொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதை நிறுத்தி விட்டனர்.

எரிபொருள் நெருக்கடியினால் முல்லைத்தீவில் கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் உணவு நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளனர். 5,000 இற்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். போரினாலும் ஆழிப் பேரலையினாலும் பெரும் அழிவுகளை சந்தித்த முல்லைத்தீவு கடற்றொழிலாளர்கள் தற்போதைய எரிபொருள் நெருக்கடி காரணமாக கடும் பாதிப்புக்களை எதிர் கொண்டுள்ளனர். (4-6-350)

# காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் போராட்டம்




(நெளுக்குளம்)

வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் அவர்கள் சுழற்சி முறையில் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் பந்தலுக்கு முன்பாக 1950 ஆம் நாளான நேற்று கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றினை மேற்கொண்டனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றிய கொடிகளை ஏந்தியிருந்தனர்.

போராட்டத்தின் பின்னர் தமிழர் தாயகக் காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் செயலாளர் கோ.ராஜ்குமார் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கையில்,

காணாமல் ஆக்கப்பட்ட எமது பிள்ளைகளை கண்டுபிடிக்கக் கோரி எமது தொடர் போராட்டம் நேற்று 1950 ஆவது நாளாகும்.

இந்தப் பந்தலில், அமெரிக்க, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா வந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களை கண்டறிய உதவும் வரை எங்களது போராட்டம் தொடரும் என மேலும் தெரிவித்தார். (4-6-299)

## மஹோற்சவம்

(கரணவாய்)

கரவெட்டி தச்சந்தோப்பு சிந்தாமணி பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் ஜூலை 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அந்தவகையில் எதிர்வரும் 12 ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் அன்று மாலை கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது. (4-6-60)

(குப்பிழான்)

வட்டுக்கோட்டை தெக்கணப் பாய் கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற் சவம் எதிர்வரும் 27 ஆம் திகதி திங்கட் கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ச்சியாகப் பத்துத் தினங்கள் இடம்பெற உள்ள இவ்வாலய மஹோற்சவத்தில் எதிர்வரும் 5 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை மாலை 4.30 மணிக்குத் தேர்த்திரு விழாவும், மறுநாள் 6 ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு தீர்த்த உற்சவமும், அன்றையதினம் இரவு 7 மணிக்கு கொடியிறக்க உற்சவமும் இடம் பெறும். (4-6-18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்புக் கடிக்கு மருந்தின்றி இதுவரை 20 பேர் உயிரிழப்பு

## மருத்துவர் வெளியிட்ட அதிர்ச்சித் தகவல்

**(கொழும்பு)**
**பாம்பு விஷத்தை முறியடிப்பதற்கான தடுப்பு மருந்துகள் இல்லாமையால் இதுவரையில் 20 பேர் வரையில் உயிரிழந்ததாக அகில இலங்கை மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் மருத்துவர் கிஷாந்த தசநாயக்க தெரிவித்துள்ளார்.**

அடுத்த மூன்று வாரங்களுக்குள் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருந்துகளுக்கும் கடுமையான தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சில மருந்துகளுக்கு தற்போது பயன்படுத்தப்படும் மாற்று மருந்துகளும் அடுத்த 3 வாரங்களுக்குள் மருத்துவமனை களஞ்சியங்களில் இருந்து படிப்படியாக குறைவடையவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவமனை களஞ்சியங்களில் இருந்து 20 வீதமே மருந்துகள் வழங்கப்படுவதாகவும், அவையும் எதிர் வரும் காலங்களில் நிறைவடையவுள்ளதாகவும் மருத்து வர் கிஷாந்த தசநாயக்க சுட்டிக் காட்டினார்.

தற்போது மருத்துவமனைகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நோயாளர்களுக்கு மாத்திரமே மருந்துகள் வழங்கப்படுவதாகவும் வயதான நோயாளிகளை விட இளம் நோயாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (நி-6)

# பயணிகள் வருகையில் பாரிய வீழ்ச்சி

(கொழும்பு)
பயணிகள் வருகை மற்றும் புறப்பாடுகளில் பாரிய சரிவு ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கொரோனா காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இலங்கைக்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை கடுமையாகக் குறைந்துள்ளதாக விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் பணிப்பாளர் ஷெஹான் சுமன்சேகர தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்றுநோய் காரணமாக நாட்டிற்கு வரும் பயணிகளின் எண்ணிக்கை ஒரு குறிப்பிட்ட அளவிற்கு குறைந்திருந்ததாகவும் தற்போதைய பொருளாதார நெருக்கடி காரணமாக வருகையாளர்கள் மற்றும் செல்பவர்களின் எண்ணிக்கை 10,000 ஆக குறைந்துள்ளதாக ஷெஹான் சுமன்சேகர தெரிவித்துள்ளார். (நி-6)

# வெறுமையாக காட்சியளிக்கும் பேலியகொட மீன் சந்தை



(கொழும்பு)
இலங்கையில் எரிபொருள் நெருக்கடி மற்றும் பொருளாதார வீழ்ச்சி காரணமாக தமது வியாபாரமும் வீழ்ச்சியடைந்துள்ளதாக பேலியகொட மீன் சந்தை வளாக வர்த்தகர்கள் தெரிவித்துள்ளனர்.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் மீன் சந்தைக்கு வரும் மீன்கள் வரத்து குறைந்துள்ளதாகவும் மீன் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

எரிபொருள் தட்டுப்பாடு, மீன்களின் விலைகள் பாரிய அளவில் உயர்வடைந்துள்ளன.

பொருளாதார நெருக்கடி போன்ற காரணங்களால் வியாபாரிகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகவும் மக்களின் கொள்வனவு செய்யும் மக்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

தற்போது குறைந்த அளவே மீன்களை வாங்குவதாகவும், இதனால் தாங்களும் கடும் நெருக்கடிக்கு உள்ளாகி வருவதாகவும் மையத்திற்கு வரும் வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (நி-6)

# தென்கிழக்கு ஆசிய வலய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்களை சந்தித்தார் ஜனாதிபதி



(கொழும்பு)
தென்கிழக்கு ஆசிய வலய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடினர்.

கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் நேற்று முன்தினம் இந்த சந்திப்பு இடம்பெற்றது. தற்போதைய பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கு தென்கிழக்கு ஆசியப் பிராந்தியத்தில் உள்ள நாடுகள் இலங்கைக்கு வழங்கிய ஆதரவையும் உதவியையும் ஜனாதிபதி இதன்போது பாராட்டினார்.

மியன்மார் தூதுவர், மலேசிய உயர்ஸ்தானிகர்,வியட்நாம் தூதுவர் ,தாய்லாந்து தூதுவர், இந்தோனேசிய தூதுவர் , ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி அனுர திஸாநாயக்க மற்றும் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டனர். (நி-6)

# மதுபானங்களின் பாவனையில் சரிவு

(கொழும்பு)
நாட்டில் மதுபானங்களின் பாவனை 30% இனால் குறைந்துள்ளதாக அரசாங்க நிதி பற்றிய குழுவில் (COPF) தெரிய வந்துள்ளது.

இலங்கை மது வரித் திணைக்களத்தினால் எதிர்பார்க்கப்பட்ட வருமானத்தை எட்டுவதற்கு பல தடைகள் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த குழுவின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மதுபானத்தை உற்பத்தி செய்வதற்கான எதனோலின் அளவை வரையறுத்துள்ளமை, டீசல் மற்றும் உலை எண்ணெய் விநியோகத்தில் ஏற்பட்டுள்ள இன்னல்களுமே இதற்கான காரணங்களாகும்.

அத்துடன், மதுபானங்களின் விலை அதகரிப்பு மற்றும் பொருளாதார இன்னல்களே மதுபான பாவனை குறைந்துள்ளமைக்கான பிரதான காரணமாகும் என அரசாங்க நிதி பற்றிய குழுவில் தெரியவந்துள்ளது.

இதன் காரணமாக சட்டவிரோத மதுபான தயாரிப்புக்களுக்கான வாய்ப்புக்கள் அதிகரித்துள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளதாகவும் அந்தக் குழுவின் அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 220 | 250 | 240 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 240 | 250 | 300 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 500 | 600 |
| தக்காளி | 600 | 500 | 500 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 240 | 160 | 150 |
| கோவா | 340 | 250 | 320 | 350 |
| கரட் | 200 | 300 | 380 | 400 |
| பூசணி | 160 | 180 | 160 | 200 |
| புடோல் | 250 | 200 | 240 | 250 |
| வாழைக்காய் | 80 | 80 | 70 | 80 |
| சின்ன வெங்காயம் | 450 | 350 | 400 | 480 |
| பெரிய வெங்காயம் | 240 | 210 | 220 | 240 |
| பாகற்காய் | 600 | 400 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 160 | 320 |
| கருணைக் கிழங்கு | 150 | 240 | 240 | 250 |
| பயற்றங்காய் | 250 | 250 | 240 | 240 |
| லீக்ஸ் | 200 | 220 | 280 | 300 |
| பீற்றூட் | 360 | 300 | 300 | 360 |
| கறிமிளகாய் | 350 | 400 | 320 | 400 |
| முருங்கைக்காய் | 400 | 800 | 800 | 800 |
| போஞ்சி | 600 | 500 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 250 | 250 |
| கீரை - 1 பிடி | 60 | 50 | 80 | 80 |
| தேசிக்காய் | 500 | 400 | 400 | 480 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 50-70 |
| இராசவள்ளி | 160 | 250 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 400 | 400 | 500 | 600 |
| முள்ளங்கி | 200 | 140 | 240 | 200 |
| பொன்னாங்காணி | 60 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 20 | 20 | 40 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | 120 | 140 |

# பதுக்கி வைக்கப்பட்டிருந்த எரிவாயு சிலிண்டர்கள் ஹற்றனில் மீட்பு



(கொழும்பு)
கொழும்பில் கறுப்பு சந்தைக்கு அனுப்புவதற்காக ஹற்றனில் பதுக்கி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் ஒரு தொகை சமையல் எரிவாயுவை பொலிஸாரும் நுகர்வோர் அதிகார சபையினரும் இணைந்து நேற்று வியாழக்கிழமை மீட்டுள்ளனர்.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என பொலிஸாரும் நுகர்வோர் அதிகாரசபை அதிகாரிகளும் அறிவித்துள்ளனர்.

ஹற்றன் பஸ் தரப்பிடத்துக்கு பின்பகுதியில் உள்ள 'கொரியர்' சேவை வழங்கும் நிலையமொன்றிலிருந்தே இவ்வாறு சமையல் எரிவாயு சிலிண்டர்கள் மீட்கப்பட்டுள்ளன.

2.5 கிலோ எடையுடைய 8 லாப் காஸ் சிலிண்டர்களும் 12.5 கிலோ எடையுடைய 12 லாப் காஸ் சிலிண்டர்களும் மீட்கப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## அம்புலிமாமா

## தண்டனை சரியா?



(நேற்றைய தொடர்ச்சி)

அவர்கள் என்னிடம் விசுவாசம் கொண்டவர்கள். அதனால் என்னிடம் என் தம்பியின் துரோகச் செயலைக் கூறி விட்டு ஏதோ ஒரு மிருகத்தைக் கொன்று அதன் இரத்தத்தை எடுத்துக் கொண்டு திரும்பிப் போய் என் தம்பியிடம் அதனைக் காட்டி என்னைக் கொன்று விட்டதாகச் சொல்லி விட்டார்கள். நானும் அப்போது முதல் ஓரிடத்தில் நிலையாக இல்லாமல் ஆண்டுக்கு ஒரு முறை இருக்கும் இடத்தை மாற்றி வருகிறேன். இன்னும் சில நாட்களில் இமயமலைக்குப் போகப் போகிறேன்" என்றார். இதைக் கேட்ட இந்துவர்மன் ஆச்சரியப்பட்டு "சுவாமி! குற்றவாளிகளைக் கடுமையாகத் தண்டிக்காவிட்டால் குற்றங்கள் தானே பெருகும்? நான் அவர்களைக் கடுமையாகத் தண்டித்து வருவதால் என்னையும் நோய் பீடிக்குமா? நானும் தவம் செய்ய வேண்டியதுதானா?" என்று கேட்டான். விவேக சீலரும் "எல்லாப் பாவங்களும் எல்லோரையும் ஒரே மாதிரி பாதிக்காது. நான் என் வாழ்க்கையில் வேறு பல பாவங்களையும் புரிந்திருக்கிறேன். அவற்றோடு இந்தப் பாவமும் சேர்ந்து என்னை இப்படிச் செய்து விட்டது. நீ பயப்படாதே. உனக்கு ஒரு படிக மணியைக் கொடுக்கிறேன். குற்றத்திற்கு தண்டனை விதிப்பதில் அது உனக்கு உதவும்" என்று கூறி ஒரு படிக மணியைக் கொடுத்தார்.

இந்துவர்மன் அதனை வாங்கிப் பார்த்துக் கொண்டிருக்கையில் விவேக சீலரும் "இதை நான் என் தவ வலிமையால் அடைந்தேன். நான் இமயத்திற்குப் போகுமுன் இதை யாராவது ஒரு மன்னனிடம் கொடுக்க நினைத்தேன். நீ வந்தாய். தண்டனை விதிக்கும் போது நீ இந்த மணியைப் பார். சரியான தண்டனையாக இருந்தால் மஞ்சளாகவும் அதிகமான தண்டனை என்றால் சிவப்பாகவும் குறைவான தண்டனை என்றால் கறுப்பாகவும் இது நிறம் மாறும். இதைக் குற்றவாளிக்குத் தண்டனை வழங்கும் போது பயன்படுத்திக் கொள்" என்றார்.

இந்துவர்மன் படிக மணியுடன் தலைநகருக்குத் திரும்பி வந்தான். அதுவரை குற்றவாளிகளை அவனே விசாரித்து தண்டனை வழங்கி வந்தான்.

இப்போது ஐந்து நீதிபதிகள் அடங்கிய ஒரு குழுவை அமைத்து அவர்கள் தனக்கு விசாரணையின் போது யோசனைகளைக் கூறச் சொன்னான். அவர்கள் தனித்தனியே கூறுவதைக் கேட்டு தண்டனையைக் குறைவாக விதித்து வந்தான். அப்போது படிக மணி கறுப்பாக மாறி விடும். (தொடரும்)

# கம்பராமாயணம்

## யுத்த காண்டம்




"அரக்கர் குலம் அழிந்தாலும் நம் பெயர் சொல்ல நீ ஒருவன். இருக்கின்றாய், என்று மகிழ்ந்திருந்தேன்; உயிர் உனக்கு நறுந்தேன்; இராமனைத் தவிர இப் பிறப்பில் வேறு மருந்தேன்? இதனை அறிந்தும் நீ இங்கு வந்தது ஏன்?" என்று கேட்டான்.

"நீ உயிர் தப்பிப் பிழைக்கவில்லை என்றால், இப்போரில் இறக்கும் அரக்கர்க்கு எள்ளும் நீரும் தந்து ஈமக்கடன் செய்யும் வாரிசினர் யார் இருக்கின்றனர்? நீ இங்கு வருவது இன்று அன்று; இழிபிறப்பினராய அரக்கர் எல்லாரும் மேல் உலகம் அடைந்த பிறகே ஆட்சிக்கு ஆள் தேவைப்படும்; உன் மீட்சியை வைத்துக் கொள்" என்றான் கும்பகர்ணன். "சொல்ல எந்தச் செய்தி உள்ளது?" என்றான் கும்பகர்ணன். "வெல்ல வந்த போரில், சொல்ல வேண்டுவது யாது?" "இகபரசுகங்கள் இரண்டும் உனக்குக் காத்து இருக்கின்றன; எனக்கு இராமன் தந்த ஆட்சியை உன் மலரடிகளில் வைத்து, நான், நீ ஏவிய பணி செய்யக் காத்துக் கிடக்கின்றேன்; எனக்குத் தந்த ஆட்சிச் செல்வத்தை உனக்குத் தந்து விட்டேன்; இது இகத்தில் கிடைக்கும்"

"பரத்தில் அடையும் பதமும் உள்ளது; உருளுறு சகட வாழ்க்கை இதனை ஒழித்து, இராமன் வீடு பேறு அருளுவான்; இதைவிட வேறு பேறுகள் என்ன கூற முடியும்? வா வந்து இராமனுடன் சேர்ந்து விடு" என்றான். அதற்கு,

"நீர்க்கோல வாழ்வை நச்சிநெடி துநாள் வளர்த்துப் பின்னைப்
போர்க்கோலம் செய்துவிட்டார்க்கு உயிர் கொடாது அங்குப் போகேன்;
தார்க்கோல மேனி மைந்த என் துயர் தவிர்த்தி யாயின்
கார்க்கோல மேனி யாயனைக் கூடுதி கடிதின் என்றான்.

"எனக்கு என்று கடமைகள் சில இருக்கின்றன; உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்ய எனக்குத் தெரியாது; செஞ்சோற்றுக் கடன் செய்து முடிப்பதில் நான் நாட்டமுடையவன்". "தேவரும் பிறரும் போற்ற ஒருவனாய் உலகினை ஆண்ட நம் அண்ணன், இராவணன் சுற்றமும் படைகளும் தனக்காக உயிர் விட்டுத் தன்னுடன் விழுந்து கிடக்கத் தம்பியருள் ஒருவரும் இன்றி மடிந்து கிடக்கலாமோ? உலகம் என் சொல்லும்?"

"வாழ்வினில் பங்கு கொண்டேன்; சாவில் பங்குகொள்ளாது அங்கு வந்தால் அது மானம் கெட்ட வாழ்வு; அதை நிதானமாய் நினைத்துப் பார்".

"இராவணன் தவறு செய்கிறான்; சொல்லிப் பார்த்தோம்; பயனில்லை; அவன் தலைமையை ஏற்ற, நாம் முன் அவனுக்காக அவனுக்கு மடிவதே அறம்: பகைவரோடு கூடி அவனை எதிர்த்துப் போரிடுவது அன்று" என்றான்.

இதற்கு மேலும் அவனை வற்புறுத்திப் பயன் இல்லை என்பதை வீடணன் அறிந்தான். இறுதியில் கும்பகர்ணன், "நடப்பது நடந்துதான் தீரும். விதியைக் கடப்பது அரிது" என்று ஒரு தத்துவக் கோட்பாட்டினை உரைத்தான்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்ப்புக்காக காத்திருக்காதே உனக்கான வாய்ப்பை நீயே ஏற்படுத்திக்கொள்.

– அப்துல் கலாம்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எரிபொருள் பங்கீட்டை சீராக நடைமுறைப்படுத்துங்கள்

எரிபொருள் தட்டுப்பாட்டால் நாட்டில் ஏற்பட்டு வருகின்ற களேபரங்கள் கொஞ்சமல்ல.

தேவை அதிகமாகவும் நிரம்பல் (Supply) குறைவாகவும் இருக்கும்போது கடும் போட்டி ஏற்படுவது இயல்பானது.

இவ்வாறு போட்டி ஏற்படுகின்றபோது, வல்லவர்கள் எப்படியும் பொருளை வாங்கிவிட, அடக்கம், பொறுமை, நீதி, நியாயம் என்ற ஒழுங்கு வரிசைக்குள் தங்களைக் கட்டுப்படுத்தி வைத்திருப்பவர்களால் எதுவும் செய்ய முடியாமல் போகும்.

இங்குதான் பங்கீட்டு நடைமுறை என்பது தேவைப்படுகிறது.

அதாவது பங்கீட்டு முறையைப் பின்பற்றுவதனூடாக தேவைக்குக் குறைவான பொருளே கிடைக்குமாயினும் குறித்த பொருள் யாருக்கெல்லாம் தேவைப்படுகின்றதோ அவர்களுக்கெல்லாம் ஓரளவேனும் கிடைப்பதாக இருக்கும்.

எனினும் பங்கீட்டு நடைமுறை என்பது சரியான கணிப்பீட்டு அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுதான் இங்கு முக்கியமான விடயம்.

அதாவது பங்கீட்டு முறையில் கணிப்பீடுகள் சரியாக மேற்கொள்ளப்படாவிடில், அதன் விளைவு மிகப்பாதகமாக அமையும்.

உதாரணத்துக்கு நேற்று முன்தினம் ஜூன் 22ஆம் திகதி திருநெல்வேலிச் சந்திக்கருகாமையில் இருக்கக்கூடிய எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் வழங்கப்பட்டது.

அரச ஊழியர்களுக்கும் பொதுமக்களுக்குமாக வழங்கப்பட்ட பெற்றோல் விநியோகத்தின் ஆரம்பத்தில் 4000 ரூபாய்க்கு பெற்றோல் வழங்கப்பட்டது.

பின்னர் 2000 ரூபாயாக அது குறைக்கப்பட்டது.

இந்தத் தொகை பின்னர் 1000 ரூபாயாகவும் 500 ரூபாயாகவும் நலிந்து, ஈற்றில் பெற்றோல் முடிவடைந்துவிட்டது என்று அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பானது, நீண்டநேரம் வரிசையில் காத்து நின்ற உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பொதுமக்களை ஏமாற்றத்துடன் வீடு செல்ல வைத்தது.

இந்த நிலைமை திருநெல்வேலி எரிபொருள் நிலையத்தில் மட்டும் நடந்ததன்று.

மாறாக எரிபொருள் நிலையங்கள் பலவற்றில் இது நடந்ததாயினும் ஓர் உதாரணத்துக்கு குறித்த எரிபொருள் நிலையம் எடுத்துரைக்கப்பட்டதென்பதை நினைவிற்கொள்வது அவசியம்.

ஆக, மேற்குறித்த உதாரணம் ஒரு பொருத்தமற்ற பங்கீட்டு முறைமைக்கானது என்பதுடன் அரச சேவையாளர்களுக்கிடையில் வேறுபாட்டை ஏற்படுத்திய ஒரு நிகழ்வாகவும் இது அமைகிறது.

ஆகையால் பங்கீட்டு முறை தொடர்பில், நிதானமான கணிப்பீடுகளும் பொருத்தமான மேற்பார்வை ஏற்பாடுகளும் உரிய பதிவுகளும் அவசியமாகிறது என்பதுதான் இங்கு கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய அதிமுக்கியமான அம்சமாகும்.

## வரிசைகளை இல்லாதொழிக்க 21 ஆவது திருத்தம் மிகவும் அவசியம்

### ஓமல்பே சோபித தேரர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் வரிசைகளை இல்லாதொழிக்க அரசமைப்பின் 21ஆவது திருத்தச் சட்டம் மிகவும் அவசியம் என்று ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

21 ஆவது திருத்தச் சட்டம் தின்பதற்கா எனப் பலரும் கேட்கிறார்கள். ஆம், தின்பதற்குத்தான்.

இன்று வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்த முடியாமல் இலட்சக் கணக்கான மக்கள் வீதிகளில் நிற்கின்றார்கள்.

21ஆவது திருத்தச் சட்டம் ஊடாகவே அரசியல் ஸ்திரத்தன்மை நாட்டில் ஏற்படும்.

அரசியல் ஸ்திரத் தன்மை ஏற்பட்டால் மாத்திரமே பொருளாதார நெருக்கடிக்குத் தீர்வு காணமுடியும். இதனூடாகவே நாட்டில் வரிசைகளை இல்லாதொழிக்க முடியும் என்றார். (ம-7)

## டயர் தட்டுப்பாடு காரணமாக இ.போ.சவின் 600 பேருந்துகள் சேவையிலிருந்து இடைநிறுத்தம்

(கொழும்பு)

வாகனங்களுக்கான டயர் தட்டுப்பாடு காரணமாக நாடு முழுவதும் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான சுமார் 600 பேருந்துகள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளன.

விநியோக நிறுவனங்கள் குறித்த டயர்களுக்கு அதிக விலையினை கோரும் நிலையில், அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு அசௌகரியம் ஏற்பட்டுள்ளமையினால் பேருந்துகள் சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளர் பண்டுக ஸ்வர்ணஹங்ச, டயர்கள் கிடைப்பதில் தொடர்ந்தும் தாமதம் நிலவுவதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தனியார் பேருந்துகளுக்கு அரச பேருந்து சாலை எரிபொருள் நிரப்பு நிலையம் ஊடாக எரிபொருளை தொடர்ந்தும் வழங்குவதற்கு இலங்கை போக்குவரத்து சபை தீர்மானித்துள்ளது. (ம-7)

## மின்சாரம் தாக்கியதில் இளைஞன் மரணம்

அம்பாறை மாவட்டம், அக்கரைப்பற்றில் மின்சாரம் தாக்கி இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று அக்கரைப்பற்றுப் பொலிஸார் நேற்று தெரிவித்துள்ளனர்.

அக்கரைப்பற்று, முதலாம் பிரிவைச் சேர்ந்த 17 வயதுடைய முகைதீன் பாவா அப்துல் காதர் சாபிக் அபான் என்பவரே மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார்.

அவர் வீடு ஒன்றின் மேல் மாடியில் சுவருக்கான வர்ணம் பூசும் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும்போதே மின்சாரம் தாக்கிப் பலியாகியுள்ளார் என்று அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (ம-7)

## எரிபொருளுக்காக காத்திருப்போருக்கு 5 இடங்களில் குடிநீர் தாங்கிகள்

யாழ்.மாநகர சபையும் இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையும் இணைந்து யாழ். மாநகர சபைக்கு உட்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்களில் காத்திருக்கும் மக்களுக்கான குடிநீர் தேவையைப் பூர்த்தி செய்யும் முகமாக இடர்கால குடிநீர் சேவையை வழங்கும் வகையில் நேற்று வியாழக்கிழமை முதற்கட்டமாக 5 இடங்களில் குடிநீர்த் தாங்கிகள் வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் விஸ்வலிங்கம் மணிவண்ணன், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் கே.பாலகிருஷ்ணன், வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ். மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன், யாழ். மாநகர சபை உறுப்பினர் வ.பார்த்தீபன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7,18)

## 1,400 லீற்றர் டீசலை பதுக்கிய வர்த்தகர் கைது

கொட்டாவ, மாகும்புர பகுதியில் சட்டவிரோதமாக 1,400 லீற்றர் டீசலை பதுக்கி வைத்திருந்த வர்த்தகர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டதாக மேல் மாகாண குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

இந்நிலையில், குறித்த நபரின் வீட்டின் மாடியிலிருந்து 500 லீற்றர் தொட்டியும் அவரது வணிக வளாகத்தில் மற்றொரு சிமிலேட் தொட்டியுமாக இரண்டு டீசல் பீப்பாய்கள் கண்டுபிடிக்கப்பட்டதாக குற்றத் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர். (ம-7)

## எரிபொருள் தீர்ந்ததால் இடையில் நின்ற ரயில்

பயணிகள் ரயில் ஒன்று எரிபொருள் தீர்ந்து விட்டதன் காரணமாக பாதியில் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று மாலை 4.30 மணியளவில் கொழும்பு கோட்டையில் இருந்து சிலாபம் நோக்கி சென்ற புகையிரதமே இவ்வாறு நிறுத்தப்பட்டுள்ளது.

குறித்த புகையிரதம் பேரலந்தையில் நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7)

## இந்து சமய தத்துவங்கள் ஐந்நூறு

சிறந்த புண்ணியம் நன்றி மறவாமையாகும். இந்த உடம்பையும் உடம்பின் உறுப்புக்களையும் உள்ளுறை கருவிக் கரணங்களையும் தந்தவன் இறைவன். கண்ணைக் கொடுத்த இறைவன் கண் தூசுபட்டு மங்காமல் இருக்கும் பொருட்டு, கண்ணுக்கு கதவு போல் இமையும் கொடுத்தான். அந்த இமையின் நுனியில் உரோமங்களையும் அமைத்தான். உணவு உண்ணுகின்ற வாயில் உணவை துகள்படுத்த (Flour mill) பற்களையும் கொடுத்தான். வாய்க்குள் நுழைகின்ற பொருள் நல்லனவா? அல்லனவா? என்று சோதித்து உள்ளே அனுப்ப வாய்க்கு நேராக இரண்டு காவற்காரர்களைப் போல் இருநாசித் துவாரங்களை அமைத்தான்.

## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### பெரும் அச்சத் தவிப்பை எப்படி கையாள்வது

செயல்களின் விளைவு பற்றிய பெரும் அச்சத் தவிப்பில் (Feverishness) பிடியில் சிக்கித் தவிக்கும் போது என்ன செய்வீர்கள் ?

நீங்கள் கற்பனை செய்வதை விட, விளைவு மிக நன்றாக இருக்கும் என்பதில் நம்பிக்கையும் பெருநம்பிக்கையும் கொள்ளவும். நம்பிக்கை மூலம் செயலால் சாதனையால் ஏற்படும் பெரும் அச்ச கிளர்ச்சியைத் தவிர்த்து விடலாம். அதிக செயலாற்றலின் பின்விளைவாகக் கூட அது இருக்கலாம். அப்போது தூக்கம், புல்லாங்குழலிசை கேட்டல், தண்ணீர்க் குளியல் போன்றவை உதவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 15

ஜேர்மனியர்கள் ஜூன் 30 அன்று மேற்கு உக்ரைன் நகரமான லிவிவ் (Lviv) நகருக்குள் நுழைந்தபோது அவர்களுடன் உக்ரைனிய தேசியவாதியான ஸ்டீபன் ஆண்ட்ரியோவிச் பண்டேராவின் உக்ரைனிய தேசியவாதிகளின் அமைப்பின் (OUN-B) உறுப்பினர்கள் சென்றனர். அதே நாளில் உக்ரைனிய தேசியவாதிகளின் அமைப்பு (OUN-B) உக்ரைனிய மாநிலத்தை மீட்டெடுப்பதையும் தற்காலிக அரசு நிர்வாகத்தை உருவாக்குவதையும் அறிவித்தனர். இதனை நாஜிகள் எதிர்பார்க்கவில்லை. சில நாட்களுக்குள் தற்காலிக அரசு நிறுவும் நடவடிக்கையின் அமைப்பாளர்கள் நாஜிகளால் கைது செய்யப்பட்டு வதை முகாம்களில் அடைக்கப்பட்டனர்.

நாஜிக்கள் உக்ரைனிய அரசியல் அபிலாஷைகளை ஆதரிப்பதற்குப் பதிலாக, ஓகஸ்டில் உக்ரைனின் பகுதியான கலீசியாவை (Galicia) போலந்துடன் நிர்வாக ரீதியாக இணைத்தனர். மற்ற உக்ரைனின் பகுதியான புகோவினாவை (Bukovina) ருமேனியாவுக்குத் திருப்பிக் கொடுத்தனர். டினீஸ்டர் (Dniester) மற்றும் தெற்கு புஹ் (Southern Buh) நதிகளுக்கு இடைப்பட்ட பகுதியை ஒ்டேசாவை (Odessa) தலைநகராகக் கொண்ட டிரான்ஸ்னிஸ்ட்ரியா (Transnistria) மாநிலமாக நிறுவி அதை ருமேனியாவின் கட்டுப்பாட்டில் விட்டனர். எஞ்சிய பகுதி உக்ரைன் ரீச்கொமிசாரியாட் என ஏற்பாடு செய்தனர். இதைப் படத்தில் பார்க்கவும்

கீவ்வில் உள்ள பேபி யாரில் (உக்ரைனிய மொழி: Babyn Yar) நகரத்தில் நடந்த படுகொலையின் முதல் இரண்டு நாட்களில் கிட்டத்தட்ட 34,000 பேர் கொல்லப்பட்டனர். நாஜிகளினால் உள்ளூர் மக்களிடமிருந்து ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட துணைப் படைகளே இப் படுகொலைகளுக்கு உதவினார்கள்.

நாஜி உக்ரைனை (Reichskommissariat) இரக்கமற்ற முறையில் நிர்வாகம் செய்த எரிக் கோச் (Erich Koch) என்பவனால் உக்ரைனியர்கள் அடிமைத்தனமாக நடத்தப்பட்டனர்.

**நாஜி உக்ரைனை (Reichskommissariat) இரக்கமற்ற முறையில் நிர்வாகம் செய்த எரிக் கோச் (Erich Koch) என்பவனால் உக்ரைனியர்கள் அடிமைத்தனமாக நடத்தப்பட்டனர்.**

குறிப்பு- எரிச் கோச் 1 ஒக்டோபர் 1928 முதல் 1945 வரை கிழக்கு பிரஷியாவில் நாஜி கட்சியின் (NSDAP) கவுலேட்டராக (Gauleiter) இருந்தார். அவர் செப்டெம்பர் 1941 முதல் ஓகஸ்ட் 1944 வரை நாஜிகளின் உக்ரைனில் (Reichskommissariat) தலைவராக (Reichskommissar) ஆக இருந்தார். இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, கோச் போலந்தில் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு 1959 இல் போர்க்குற்றங்களுக்காக மரண தண்டனை விதிக்கப்பட்டார்.




ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில், நாஜிக்கள் தங்கள் "இன" கொள்கைகளை செயற்படுத்த முயன்றனர். 1941 இலையுதிர்காலத்தில் யூதர்களின் படுகொலைகள் தொடங்கி 1944 வரை தொடர்ந்தது. கிட்டத்தட்ட 1.5 மில்லியன் உக்ரைனிய யூதர்கள் அழிந்தனர், மேலும் 800,000 இற்கும் மேற்பட்டோர் கிழக்கு நோக்கி இடம்பெயர்ந்தனர்.

விவசாயிகளின் தீவிர நம்பிக்கையாக இருந்த கூட்டுப் பண்ணைகள் அப்படியே விடப்பட்டன, தொழில் துறை மோசமடைய அனுமதிக்கப்பட்டது. மேலும் அனைத்து வளங்களும் ஜேர்மன் போர் முயற்சிக்கு ஆதரவாக இயக்கப்பட்டதால் நகரங்கள் உணவுப்பொருட்கள் இல்லாமல் தடுமாறின. சுமார் 2.2 மில்லியன் மக்கள் உக்ரைனிலிருந்து ஜேர்மனிக்கு அடிமைத் தொழிலாளர்களாக அழைத்துச் செல்லப்பட்டனர். கலாசார நடவடிக்கைகள் ஒடுக்கப்பட்டன, மேலும் கல்வி ஆரம்ப மட்டத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது.


எரிக் கோச் (Erich Koch)

**சுமார் 2.2 மில்லியன் மக்கள் உக்ரைனிலிருந்து ஜேர்மனிக்கு அடிமைத் தொழிலாளர்களாக அழைத்துச் செல்லப்பட்டனர்.**

புத்துயிர் பெற்ற உக்ரைனிய ஆர்த்தடாக்ஸ் தேவாலயம் (Ukrainian Orthodox Church) மட்டுமே ஒரு தேசிய நிறுவனமாக அதன் பணியை மீண்டும் தொடங்க அனுமதிக்கப்பட்டது. கலீசியாவில் உக்ரைனியர்களின் நிலைமை ஓரளவு சிறப்பாக இருந்தது. அங்கு கட்டுப்படுத்தப்பட்ட கலாசார, குடிமை மற்றும் நிவாரண நடவடிக்கைகள் மையப்படுத்தப்பட்ட (மத்தியின்) கட்டுப்பாட்டின் கீழ் அனுமதிக்கப்பட்டன.

உக்ரைனிய அரசியல் செயற்பாட்டுக்கு ஆரம்பத்தில் ஜேர்மனியர்களுடனான ஒத்துழைப்பை முன்னறிவித்திருந்த உக்ரைனியர்கள், இத்தகைய மிருகத்தனமான நிலைமைகளினால் எதிர்க்கத் தொடங்கியதோடு, இரகசியமாக எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினார்கள்.

1941 இல் கிழக்கு நோக்கி ஓடிய OUN குழுக்கள் பிடிக்கப்பட்டு ஜேர்மன் அதிகாரிகளால் மரண தண்டனை உட்பட அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டனர். இதனால் அக் குழுக்கள் தங்கள் தேசியவாத கருத்துக்களை இரகசியமாக பிரசாரம் செய்தனர். மற்றும் உள்ளூர் மக்களுடனான தொடர்பு மூலம், தங்கள் சித்தாந்தத்தை மிகவும் ஜனநாயக, பன்மைத்துவமாக திசையில் மாற்றத் தொடங்கினர். கிழக்கு மற்றும் மத்திய உக்ரைனில், கம்யூனிஸ்ட் கட்சியினர் நிலத்தடி இருப்பை (underground existence) பராமரித்தன. அதே நேரத்தில் உக்ரைனின் வடக்கு காடுகளில் நாஜிகளுக்கு எதிரான சோவியத்துக்கு ஆதரவான இயக் கம் (Soviet partisan movement) வளர்ந்தது.

**உக்ரைனின் வடக்கு காடுகளில் நாஜிகளுக்கு எதிரான சோவியத்துக்கு ஆதரவான இயக்கம் (Soviet partisan movement) வளர்ந்தது.**

1942 இன் ஆரம்பத்தில், தேசியவாத சிந்தனைப் பிரிவுகளின் உருவாக்கம் வோல்ஹினியாவில் தொடங்கியது. பின்னர் கலீசியாவில், அது உக்ரைனிய கிளர்ச்சி இராணுவம் (Ukrainian Insurgent Army - UPA) என அறியப்பட்டது. நாஜி ஜேர்மனியர்களுடன் கொரில்லாப் போரை நடத்திய அதேநேரத்தில் சோவியத் சார்பு குழுக்களும் உக்ரைனிய கிளர்ச்சி இராணுவம் தங்களுக்குள் ஒருவருக்கொருவர் சண்டையிட்டன.

1943 இன் முற்பகுதியில் ஸ்டாலின்கிராட் போரில் ஜேர்மனியர்களுக்கு எதிரான வெற்றிக்குப் பிறகு, சோவியத் ஒன்றியம் மேற்கு நோக்கி எதிர் தாக்குதலைத் தொடங்கினர்.1943 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், ஜேர்மனியர்கள் உக்ரைனில் இருந்து மெதுவாக பின்வாங்கத் தொடங்கினர், நவம்பரில் சோவியத் ஒன்றியம் மீண்டும் கீவ்வுக்குள் நுழைந்தது.

முன்னணியின் அணுகுமுறையுடன், மேற்கு உக்ரைனில் கொரில்லா.நடவடிக்கை தீவிரமடைந்தது. மேலும் உக்ரைனியர்களுக்கும் சிறுபான்மை போலந்தினருக்கும் இடையில் ஏராளமான பொதுமக்கள் பாதிக்கப்பட்டதாகக் கூறும் இரத்தக்களரி மோதல்கள் நிகழ்ந்தன. 1944 வசந்த காலத்தில், செம்படை கலீசியாவிற்குள் ஊடுருவத் தொடங்கியது. ஒக்டோபர் இறுதியில் உக்ரைன் முழுவதும் மீண்டும் சோவியத் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

**1943 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், ஜேர்மனியர்கள் உக்ரைனில் இருந்து மெதுவாக பின்வாங்கத் தொடங்கினர், 1944 வசந்த காலத்தில் செம்படை கலீசியாவிற்குள் ஊடுருவ தொடங்கியது. ஒக்டோபர் இறுதியில் உக்ரைன் முழுவதும் மீண்டும் சோவியத் காட்டுப்பாட்டின் கீழ் வந்தது.**

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸார் மீது...

யாற்றும்போது பொலிஸ் உத்தியோகத்தருக்கும் இராணுவ லெப்டினன் கேர்னலுக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதத்தையடுத்து இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாக்குவாதத்தைத் தொடர்ந்து லெப்டினன் கேர்னல் பொலிஸ் அதிகாரியைத் தாக்கியமை பெற்றோல் நிலையத்தில் உள்ள சி.சி.ரி.வி கமராவில் பதிவாகியுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் உத்தியோகத்தர் வரகாபொல வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சம்பவம் தொடர்பில் லெப்டினன் கேர்னல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளார். (ம-7)

## நீதி அமைச்சர்...

யின் பொதுச் செயலாளர் எம்டி எஸ் இராமச்சந்திரனின் அழைப்பையேற்று உயர் கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்திற்கு பிரதம அதிதியாக நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ கலந்து கொள்ளவுள்ளார்.

அதுமட்டுமல்லாது திங்கட்கிழமை வரணி சுட்டிபுர அம்மன் ஆலய தேர்த் திருவிழாவிலும் அவர் கலந்து கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

















## அதிக விலைக்கு...

நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்படி, அதிகபட்ச சில்லறை விலைக்கு ஏற்ப அரிசியை கொள்முதல் செய்து விற்பனை செய்யுமாறு நுகர்வோர் விவகார அதிகார சபை, மொத்த மற்றும் சில்லறை விற்பனையாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. (ம-7)

## வவுனியாவில்...

கிளில் வீடு நோக்கி சென்றுகொண்டிருந்த போதே விபத்து ஏற்பட்டுள்ளது.

ஓமந்தையில் இருந்து வீட்டிற்கு வந்து கொண்டிருந்தவரை அதே திசையில் பயணித்த கார் மோதியதில் 42 வயதுடைய பாலகிருஸ்ணன் என்ற நபர் பலியானதுடன் மைத்துனர் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை குறித்த சம்பவம் தொடர்பில் ஓமந்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ம-7)

## 7 ஆயிரம்...

வருகை தரவுள்ளதாக லிட்ரோ நிறுவனத்தில் தலைவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## யாழில் பிரதேச...

கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் பெறுவதற்காகப் பொதுமக்கள் பல மணிநேரம் நீண்ட் வரிசைகளில் காத்திருந்த வேளையில் நல்லூர் பிரதேச செயலர், தமது பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு மாத்திரமே எரிபொருள் வழங்க வேண்டும் என எரிபொருள் நிரப்பு நிலையத்தினருக்குப் பணித்திருந்தார். இதன் காரணமாக அங்கு பாரிய குழப்பம் ஏற்பட்டது.

நல்லூர் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு நேற்று முன்தினம் திருநெல்வேலி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருள் விநியோகிக்கப்பட்ட நிலையில் நேற்றையதினமும் கல்வியங்காட்டு எரிபொருள் நிரப்பு நிலையத்தினையும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கியமையால் குழப்பம் ஏற்பட்டது.

மேலும் கோப்பாய்ப் பிரதேச செயலகத்தினரால் கோப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்கு எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டியமையால் குழப்பம் ஏற்பட்டது. குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பொதுமக்கள் நீண்டநேரம் வரிசையில் காத்திருந்தவேளை குறித்த எரிபொருள் நிரப்பு நிலையத்தில் அத்தியாவசிய சேவை பணியாளர்களுக்குத்தான் எரிபொருள் விநியோகிக்கப்படும் என அறிவித்தல் ஒட்டப்பட்டமையால் குழப்பம் ஏற்பட்டு அறிவித்தல்களைக் கிழித்தெறிந்தனர்.

வேலணை மற்றும் யாழ்ப்பாண பிரதேச செயலகங்களால் இரண்டு எரிபொருள் நிரப்பு நிலையங்கள் ஏற்கனவே அறிவிக்கப்பட்டமையால் அவ் இரு எரிபொருள் நிரப்பு நிலையங்களிலும் குழப்பங்கள் இன்றி எரிபொருள் விநியோகிக்கப்பட்டது. இதேவேளை, பிரதேச செயலர்களின் திடீர் அறிவிப்புக்களே குழப்பங்கள் ஏற்படக் காரணமாக அமைந்திருந்தன. (ம-7,18,33)

## இலங்கையின்...

இலங்கைக்கு தொடர்ந்தும் நிதி உதவிகளை வழங்குதல் தொடர்பில் நேற்று முற்பகல் இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்திய விசேட தூதுக்குழு கொழும்பு, கோட்டை ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இந்தியக் கடன் உதவியின் கீழ் எரிபொருள், மருந்து, உரம் உள்ளிட்ட அத்தியாவசிய உணவுப் பொருட்களை இலங்கை ஏற்கனவே பெற்றுள்ளது. அது தொடர்பில் மீளாய்வு செய்த தூதுக்குழு,

இலங்கைக்கு தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்க இந்திய அரசாங்கமும் அரசியல் அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

கடினமான காலங்களில் இலங்கைக்கு உதவுவதில் இந்திய அரசாங்கம் கணிசமான பங்கை வகிக்கிறது. அதற்காக இலங்கை மக்களும் அரசாங்கமும் பாராட்டுகளையும் நன்றியையும் இந்திய அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்வதாக ஜனாதிபதி தூதுக் குழுவினரிடம் குறிப்பிட்டார்.

இலங்கையின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தவும், இயல்பு நிலைக்கு மாற்றவும் இந்திய உதவித் திட்டத்தின் எதிர்கால நடவடிக்கை குறித்து இரு தரப்பினரும் விரிவாக கலந்துரையாடினர். இக்கட்டான காலகட்டத்திற்குப் பிறகு நாடு மிக விரைவில் இயல்பு நிலைக்கு திரும்பும் என்று தூதுக்குழுவினர் நம்பிக்கை தெரிவித்தனர்.

இந்திய பொருளாதார உறவுகள் தொடர்பான செயலாளர் அஜய் சேத், தலைமை பொருளாதார ஆலோசகர் கலாநிதி வி. அனந்த நாகேஸ்வரன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, துணை உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப், இந்திய கடல் சார் பிராந்திய ஒன்றிணைந்த செயலாளர் கார்த்திக் பாண்டே மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத் ஆகியோர் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (ம-7)

## நாட்...

ரஷ்யாவிலிருந்து எரிபொருள் மற்றும் உரங்களைப் பெறுவது தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்ட கடிதத்திற்கு எவ்வித பதிலும் இல்லை எனவும் ஜனாதிபதியும் பிரதமரும் தயக்கமின்றி பதிலளிக்க வேண்டும் எனவும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர உடனடியாக ரஷ்ய நாட்டுடன் கலந்துரையாட வேண்டும் எனவும் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

எரிபொருள் பெறும் பொறுப்பை எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினரிடம் ஒப்படைக்காமல் ஜனாதிபதியும் அரசாங்கமும் அதை செய்ய வேண்டும் என்றார்.

எதிர்வரும் காலங்களில் ஜப்பான், சீனா மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் இலங்கைக்கு தமது ஆதரவை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிவித்த நாணயக்கார, ரஷ்யாவும் இந்தக் குழுவில் இணையலாம் என்றும் கூறினார்.

ரஷ்யாவில் எரிபொருள், உரம் மற்றும் எரிவாயு உள்ளன. இலங்கைக்கு ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. இதன் காரணமாக ரஷ்யாவிடம் இருந்து எரிபொருளை கொள்வனவு செய்ய இலங்கை அஞ்சுவதாகவும் அரசாங்கம் தொடர்ந்தும் பொறுப்பற்ற முறையில் செயற்பட்டால் மக்கள் பொறுமை இழப்பார்கள் எனவும் நாணயக்கார தெரிவித்தார். (ம-7)

## ஜப்பான் தூதுவர்...

எதிர்வரும் 28 ஆம் திகதி அவர் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இலங்கையின் சமகால நிலை, பொருளாதார நிலை தொடர்பில் ஆராயவே இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

மேலும் இலங்கையின் உயர்மட்ட அரசியல், பொருளாதார நிபுணர்களுடனும் அரசியல் கட்சிகளின் பிரதானிகளுடனும் அவர் கலந்துரையாடல்களினை மேற்கொள்ளவுள்ளார்.

29ஆம் திகதி பத்திரிகைகளின் ஆசிரியர்களையும் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். (ம-7)
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த

## 700 கிலோ கடலட்டை இந்தியாவில் மீட்பு



(சென்னை)

மண்டபம் அருகே இலங்கைக்கு கடத்துவதற்காக பதுக்கி வைக்கப்பட்டிருந்த 700 கிலோ கடலட்டைகளை நேற்று மாலை வனத் துறை அதிகாரிகள் மீட்டுள்ளனர்.

மண்டபத்தை அடுத்த வேதாளை கடற்கரை பகுதியில் இலங்கைக்கு கடத்துவதற்காக கடலட்டை பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக வனத்துறை அதிகாரிகளுக்கு இரகசியத் தகவல் கிடைத்துள்ளது.

இதையடுத்து அப்பகுதிக்கு விரைந்து சென்ற வனத்துறையினர் இலங்கைக்கு கடத்துவதற்காக பதப் படுத்தப்பட்ட 700 கிலோ எடை கொண்ட கடல் அட்டையை கைப்பற்றியுள்ளனர்.

மேலும் கைப்பற்றப்பட்ட கடல் அட்டையின் மதிப்பு சர்வதேச அளவில் 35 இலட்ச ரூபாய் இருக்கும் என வனத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

மேலதிக விசாரணைகளை வனத் துறை அதிகாரிகள் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,285)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித் துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11963)

**076 825 7716** (ஆகாஸ்)



**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு.**

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- A9 வீதியில் இருந்து 50 m தூரத்தில் (இரண்டாவது காணி)
- நல்ல சூழல், நல்ல தண்ணீர் நிலம்
- 20 அடி பாதையுடன்
- கைதடி சந்தியில் இருந்து 300 m தூரத்தில்

(11966)

பார்வையிடும் நேரம்

காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **076 658 3621, 077 259 0391**



**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழியில் A9 வீதி முகப்புடன் 27 பரப்புக் காணி விற்பனைக்கு.**

- A9 வீதி முகப்பாக கொண்டது.
- 04 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- வர்த்தக நிலையங்கள், திருமண மண்டபங்கள், களஞ்சியசாலைகள், வாகன காட்சியறைகள் அமைக்க உகந்த பகுதி.
- நாவற்குழிச் சந்தியில் இருந்து 300 M தூரத்தில்

(11966)

பார்வையிடும் நேரம்

காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **074 269 0854, 076 261 1282**


## எரிபொருள் வரிசையில் மேலும் ஒருவர் மரணம்

(கொழும்பு)

ஹொரணை, அங்குருவதொட்ட, படகொட சிபெட்கோ எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் காத்திருந்த ஒருவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் அஹங்கம பகுதியைச் சேர்ந்த வீரப்புலிகே சுனில் (வயது-59) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

தனியார் ரப்பர் பால் போக்குவரத்து நிறுவனத்தில் பவுசரின் சாரதி எட்டு நாட்களாக வரிசையில் காத்திருந்துள்ளார்.

நேற்று முன்தினம் மதியம் வீட்டுக்கு செல்வதற்காக குறித்த பவுசரை சாரதி சுனிலிடம் ஒப்படைத்துள்ளார். அவர் எரிபொருள் நிரப்பு நிலையத்திலேயே உயிரிழந்தார். (ம-7)

## நியூசிலாந்து இலங்கைக்கு உதவி

(வெலிங்டன்)

பொருளாதார நெருக்கடியால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைச் சிறுவர்களுக்கு அவசர உதவிகளை வழங்குவதற்காக நியூசிலாந்து, UNICEF நிறுவனத்திற்கு 8 இலட்சம் டொலர்களை வழங்கவுள்ளது.

நியூசிலாந்து வெளிவிவகார அமைச்சர் Nanaia Mahuta இதனை உறுதி செய்துள்ளார். (ம-7)


வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு

021 221 7603, 021 567 1532



**வீடு வாடகைக்கு தேவை**

யாழ்.நகரை அண்மித்த பகுதியில் சிறிய குடும்பம் ஒன்று வசிக்கக்கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்குத் தேவை. வீட்டை வாடகைக்கு வழங்கக் கூடியவர்கள் தொடர்பு கொள்ளவும்.


தொடர்பு:

**077 745 1625**


**கண்ணீர் அஞ்சலி**

குழந்தை உள்ளம் கொண்ட பணிப்புலம் கலட்டி ஹரிஹரசுதன் ஐயப்பன் ஆலய பொருளாளர்

அமரர் **துரைசிங்கம் நவசிவாயம்**



தோற்றம்:- 06.10.1957
மறைவு:- 20.06.2022

அவர்களின் மறைவுக்கு எமது ஆத்மார்த்தமான அஞ்சலிகள்!

தங்க. முகுந்தன் (குருஸ்வாமி)
சபரி ஸ்ரீ ஐயப்பன் யாத்திரைக்குழு,
மூளாய், சுழிபுரம். 077 727 9238

(C-4533)


**காணி விற்பனைக்கு**

**யாழ்ப்பாணம் நாவற்குழிச் சந்திக்கு அருகாமையில் 112 பரப்புக் காணி விற்பனைக்கு.**

- A9 வீதியில் இருந்து 250 m தூரத்தில்
- நாவற்குழி சந்தியில் இருந்து 300 m தூரம்
- நல்ல இயற்கை சூழலுடன் நல்ல தண்ணீர் நிலம்
- மூன்று பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- 18 அடிப்பாதையுடன்

(11966)

ஒரு பரப்பின் விலை

நான்கு இலட்சம் ரூபாய் மட்டும்

பார்வையிடும் நேரம்

காலை 8 மணி முதல் மாலை 6 மணிவரை

தொடர்பு:- **074 291 3726, 074 291 3727**


**துயர் பகிர்வு**

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தின் ஆரம்ப கால மூத்த உறுப்பினர்களும் எங்களை பலருடன் இணைந்து தற்போது வரை வழிநடாத்திக் கொண்டிருக்கும் ந.ரஞ்சித்குமார், ந.பாலகுமார், ந.விஜயகுமார் ஆகியோரின் அன்புத் தாயார்

திருமதி

**சிவபாக்கியம் நாகலிங்கம்**



அவர்களின் மறைவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னையின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிராத்திக்கின்றோம்.

(C-4532)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையமும் விளையாட்டுக் கழகமும்
(K.C.C.C & K.C.C.C.S.C)

பிறப்பு 23. 08. 1934
இறப்பு 21.06.2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.